
உள்ளத்தை உருக்கும் அற்புத
சம்பவங்கள்
நிறைந்த
அருமையான
சித்திரம்
ஜெமினியின்
சக்ரதாரி
இப்பொழுது சென்னை கிரௌன், ஸ்டார் இரு தியேட்டர்களிலும்
மற்றும் அநேக முக்கிய நகரங்களிலும் நடைபெறுகிறது.....
டைரக்ஷன்: கே. எஸ். கோபாலகிருஷ்ணன்
சென்னையில் தினசரி 3 காட்சிகள்: 3, 6-15, 9-30

மற்றும் பல நகரங்களிலும் மக்கள் திரள் திரளாகக் கண்டு களிக்கின்றனர்

T. R. மஹாலிங்கம், அஞ்சலிதேவி முதலியோர் நடித்தது

மாடர்ன் தியேட்டர்ஸின்

ஆதித்தன் கனவு

பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத கதைப்போக்கு!

இனிய கானம்! இன்ப நடனங்கள்!

தாலாட்டுக் காட்சிகளின் தனிச் சிறப்பு!

டைரெக்ஷன் T. R. சுந்தரம் B.A., B.Sc. (Leeds)

மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட்

சேலம் & மதுரை.

OFFICE OF THE REGISTRA

இந்த ஊசியில்

பட்டை-2. ஊசி - 3

டிஸம்பர் 1948

1.	அவசரம் ஏன் ?	... தலையங்கம்	5
2.	உள்ளது உள்ளபடி	... 'ஜடாயு'	6
3.	சக்ரதாரி	... பட விமர்சனம்	7
4.	ஐயோடா !	... தமாஷ் படம்	9
5.	புஷ்பவல்லி	வாழ்க்கை வர்ணனை	10
6.	புஷ்பவல்லி	... ஆர்ட் படம்	17
7.	அஞ்சலி தேவி	... மூவர்ணப் படம்	18
8.	கிடைக்காத பேட்டி	டி. எஸ். சந்தானம்	19
9.	குண்டுசியைக் கேளுங்கள்	... பதில்கள்	22
10.	செய்திப் படங்கள்	... படங்கள்	31
11.	துனிப்புல்	... 'வெட்டுக்கிளி'	39
12.	பொதுஜனம் பேசுகிறார்	... கடிதங்கள்	43
13.	இது செய்தி	... செய்திகள்	47
14.	ஜெயகௌரி	... ஆர்ட் படம்	51
15.	குமாரி கமலா	... ஆர்ட் படம்	52
16.	வேண்டாத மனைவி	... பத்மபாரதி	54
17.	பிரம்மலோகம்	படச் செய்திகள்	58
18.	புஸ்தகப் பொழுது	... விமர்சனம்	61
19.	கடைசிச் செய்திகள்	... ...	62
20.	குண்டுசி டைரி	... தினக் குறிப்பு	68

அட்டைப்படம் : புஷ்பவல்லி

போட்டி, வெற்றி சுலபம்

உங்கள் அறிவிற்கும் திறமைக்கும் ஏற்ற பயிற்சி.
ஒய்வு நேரத்திற்கு சிறந்த பொழுது போக்கு.

குறைந்த செலவில் நல்ல வருமானம்

நீங்கள் இருக்கும் இடத்திலேயே அடையலாம்.
இந்தியா, பாகிஸ்தான், இலங்கையிலுள்ள ஆண் பெண் சிறுவர் எல்லோரும் கலந்து கொள்ளலாம்.

I. 12000
II. 7000

ரூ. 25,000*

III. 4000
IV. 2000

1	6	11	16
8	15	2	9
12	3	14	5
13	10	7	4

போட்டி — B-38.

2 முதல் 17 வரையிலுள்ள எண்களை இந்தக் கட்டத்தில் மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், மூலைக்கு மூலையும் எப்படிக் கூட்டினாலும் 38 வரும்படி அமைக்கவும். ஒரு எண்ணை ஒரு தடவைதான் உபயோகிக்கலாம்.

134249.

உங்கள் விடைகளை
19-1-49ந் தேதிக்குள் தபாலில் போடவும்

பரிசு ஜாபிதா 29-1-49ந் தேதி எல்லோருக்கும் அனுப்பப்படும்.

[illegible] பாங்கி[illegible]ல் செய்து டிபாஸிட்டில் வைக்கப்பட்டிருக்கும் சரியான விடைக்கு என்னுடைய, எண் கட்டத்திற்குக் கட்டம் சரியான விடைக்கு முதற்பரிசும், முதல் இரண்டு வரிசை மட்டும் சரியான விடைக்கு 2-ம் பரிசும், முதல் ஒரு வரிசை மட்டும் சரியான விடைக்கு 3-ம் பரிசும், அதிகப்படியான விடைகளை அனுப்புபவருக்கு 4-ம் பரிசும் அளிக்கப்படும்.

பிரவேசக் கட்டணம் : ஒவ்வொரு விடைக்கும் ஒரு ரூபாய்.
ஏழு விடைகளுக்கு ரூ. 5 மாத்திரம் மணியார்டர் செய்யவும்.

பாங்கில் வைத்துள்ள விடைக்கு சரியாயிருக்கும் உங்களுடைய விடை ஒவ்வொன்றிற்கும் பரிசு உண்டு. ஆதலால் நீங்கள் எத்தனை விடைகளை வேண்டுமானாலும் சாதாரண காகிதத்தில் தயார் செய்து அனுப்பலாம். பரிசு ஜாபிதாவுக்காக உங்கள் அட்ரஸ் எழுதிய கவர் ஒன்றை வைத்து அனுப்பவும்.* நிகர வசூலுக்குத் தக்கபடி பரிசுத்தொகை கூடும் அல்லது குறையும். 12000, 7000, 4000, 2000 (மொத்தம் 25000) விகிதாசாரப்படி நிகர வசூலை வகுத்து பரிசுதாரர்களுக்கு அளிக்கப்படும். எல்லா விஷயங்களுக்கும் எங்கள் தீர்ப்பே முடிவானதும் சட்டப்படி கட்டுப்படுத்துவதுமாகும். மற்ற விதிகள் வழக்கம் போல்.

லக் & கோ., Firm No. 1564 (Govt. Regd.)
43/23, ஈஸ்வரன் தெரு, மாம்பலம், மதராஸ். 17.

பட்டை 2
ஊசி 3

குண்டூசி

டிசம்பர்
1948

ஆசிரியர் பி.ஆர்.எஸ்.கோபால்

அவசரம் ஏன்?

சில மாதங்களுக்கு முன் இந்திய சர்க்கார் படங்களின் நீளத்தைக் குறைப்பது பற்றி படத் தொழிலில் சம்பந்தப் பட்டவர்களின் அபிப்பிராயத்தைக் கேட்டிருந்தது. இன்னும் இவ்விஷயத்தில் இந்திய சர்க்கார் ஒரு முடிவுக்கு வரவில்லை.

இதற்கிடையில், சென்னை சர்க்கார் ஒரு விபரீதமான உத்தரவை திடீரென்று பிறப்பித்திருக்கின்றனர். அதாவது, ஜனவரி 1ந்தேதிக்குப் பிறகு இம்மாகாணத் தியேட்டர்களில் காட்சி நேரம் 3மணிக்கு மேல் இருக்கலாகாது என்பதும், படங்களின் நீளம் 13,000 அடிகளுக்கு மேற்படக் கூடாது என்பதும் அதன் சாராம்சம்.

இவ்வுத்தரவு அமுலுக்கு வருவதால் எவ்வளவு கஷ்டங்கள் ஏற்படும்; அதனல் படத் தொழில் எவ்வளவு தூரம் பாதிக்கப்படும் —என்பவை ஆராய்ந்த பின் இந்த உத்தரவைப் பிறப்பித் திருப்பதாகத் தோன்ற வில்லை. இந்த விஷயத்தை இந்திய சர்க்கார் ஆலோசித்து வரும் போது, சென்னை சர்க்கார் அவசரப் பட்டுக் கொண்டு இவ்வுத்தரவைப் பிறப்பித்திருக்க வேண்டிய தில்லை. அப்படியே செய்தாலும் முன்பு சர்க்கார் செய்ததே போல் புதிய படங்களின் நீளத்தை மட்டும் கட்டுப் படுத்தியிருந்தால் புத்திசாலித்தனமாக இருந்திருக்கும். முன்பு தயாரான அநேக படங்கள் மாகாணம் பூராவும் சரிவரக் காட்டப் படாமலிருக்கின்றன. காட்சிநேரக் கட்டுப்பாடானது நம் படமுதலாளிகளை மிகவும் பாதிக்கும். பழைய படங்களையெல்லாம் புதிய நீளத்திற்கு வெட்டுவது சுத்த முட்டாள் தனமான காரியமாயிருக்கும். இப்படங்களை அதிக நீளத்தில் முன்பு பார்த்துள்ள ஜனங்கள் மிக அதிருப்தி அடைவர்; வசூலும் குறையும். பணம் போட்டிருப்பவர்களையும், உழைப்பவர்களையும் நஷ்டத்திற்கு உட்படுத்துவது சரியல்ல.

ஆதலால் பழைய படங்களுக்கு விதிவிலக்கு அளித்துவிட வேண்டும். புதிதாகத் தயாராகும் படங்களை மட்டுமே இவ்வுத்தரவு பாதிக்க வேண்டும். 1949 ஜனவரி 1ந் தேதிக்குள் ஆரம்பிக்கப்பட்டு ஓரளவு தயாரான படங்களுக்கும் விதி விலக்கு அளித்து விட வேண்டும். இவ்விதம் செய்யாத பக்ஷத்தில், அநேக பட முதலாளிகள் நஷ்டம் அடைவார்கள். அவர்கள் அடையும் நஷ்டம் படத் தொழிலின் வளர்ச்சியை மிக பாதிக்கும் என்பதை சர்க்கார் கவனிக்க வேண்டும்.

உள்ளது உள்ளபடி

சென்னை சர்க்கார் "தென்னிந்தியப் படங்களின் நீளம் இனி 13,000 அடிகளுக்கு அதிகரிக்கலாகாது" என்று ஒரு உத்தரவை வெளியிட்டிருக்கின்றனர். செப்டம்பர் மாத "குண்டூசி"யில், நம படங்களுக்கு 14,000 அடி நீளம் அநுமதிக்கப் படலாம் என்று எழுதியிருந்தேன். பிலிம் சேம்பரோ 13,500 அடி நீளம் கேட்டது. சர்க்காரோ 13,000 அடிகளை நிர்ணயித்திருக்கின்றனர். ஆகவே நம் சிபார்சுக்கும் சேம்பரின் சிபார்சுக்கும் சர்க்காருடைய உத்தரவுக்கும் அதிக வித்தியாசமில்லை. ஆதலால் இவ்வுத்தரவை நான் ஆதரிக்கிறேன். நம் பட முதலாளிகளும் ஏற்றுக் கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன்.

சினிமா விசாரணை

சினிமா சம்பந்தமாக விசாரிப்பதற்கு இந்திய சர்க்கார் ஒரு கமிட்டியை ஏற்படுத்தப் போவதை தென்னிந்திய பிலிம் சேம்பர் வரவேற்கிறது. நெடுநாளாக இவ்வாறு செய்யும்படிச் சர்க்காரைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இனித்தான் அந்த மனோபிஷ்டம் நிறைவேறப் போகிறது.

'மேற்படி கமிட்டியில் சென்னை, வங்காளம், பம்பாய் ஆகிய மாகாண சர்க்கார்களின் பிரதிநிதிகளும், மேற்படி மூன்று மாகாணப் படத்தொழிலின் பிரதிநிதிகள் மூவரும் கமிட்டியில் இருக்க வேண்டும்' என்று சேம்பர் விரும்புகிறது. இது ரொம்பவும் சரியான யோசனை தான். இந்திய சர்க்கார் அதன்படியே செய்வார்களென நம்புகிறேன்.

மேற் சொன்ன மும் மாகாணப் படத் தொழிலும் தனித்தனியே வளர்ந்து வருகிறது. அந்தந்த மகாணத்திலுள்ளவர்களுக்கு பிரத்தியேகமான பிரச்னைகளும், கஷ்டங்களும் உள்ளன. ஆதலால், தொழில பிரதிநிதிகளைச் சேர்த்துக் கொள்ளுவதால் கமிட்டியின் வேலை சுலபமாக இருக்கும்.

வடக்கே ஆரம்பிக்கப்படும் அகில இந்திய சங்கங்கள், இயக்கங்கள் இவைகளிலெல்லாம் வடக்கத்தியருக்கே பிரதானப் பங்கு கிடைத்து வருகிறது. ஆனால் இது சர்க்காரின் கமிட்டியாய் இருப்பதால் இத்தகைய பாரபக்ஷங்களுக்கு இடமிருக்கக் கூடாது.

ஆதரவு அளியுங்கள்

இந்திய சர்க்கார் அமைக்கப் போகும் கமிட்டியால் மிகுந்த நன்மை ஏற்படும் என்று எதிர் பார்க்கிறேன். சினிமா சம்பந்தமான புள்ளி விவரங்களையும், அதன் தற்போதைய நிலைமையையும், எதிர் காலத்தில் இத்தொழில் எவ்வாறு முன்னேறக்கூடும் என்பதையும் கமிட்டியினர் கண்டுபிடிக்கக் கூடும். படத்தொழில் சம்பந்தப்பட்டவர்கள் அசுவாரஸ்யமில்லாமல், இக் கமிட்டி நியமிக்கப்பட்டதும் அதற்குப் பூரண ஆதரவை அளிக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன். அதன் மூலம் அவர்களுக்கே நன்மை ஏற்படும்.

உள்ள முருக்கும் "சக்ரதாரி"

ஜெமினியின் உன்னத சிருஷ்டி

புராணம், பக்திமான்களின் சரிதை— ஆகிய தமிழ்ப் படங்களைப் பார்க்க வேண்டி வரும் போதெல்லாம் நான் சலிப்புடன் தான் செல்லுவது வழக்கம், "சக்ரதாரி"யையும் நான் இதே போல சலிப்புற்ற மனதுடன் தான் பார்க்கச் சென்றேன் என்பதை ஒளிக்காமல் சொல்லுகிறேன். ஆனால், நான் எதிர்பார்த்ததற்குமாறாக—என் அநேகர் எதிர்ப்பார்த்ததற்கு மாறாக "சக்ரதாரி" சலிப்பைப் போக்கியதுமட்டுமல்லாமல் சந்தோஷத்தையும் உண்டு பண்ணி விட்டது. 'சக்ரதாரி' போல உன்னத முறையில் தயாரிப்பதாகயிருந்தால் நம் பட முதலாளிகள் புராணப் படங்களையும், பக்தர்களின் படங்களையுமே தயாரித்துக் கொண்டிருப்பதை ஆடசேபிக்க வேண்டாம் என்று தோன்றுகிறது.

காமக் கவர்ச்சியை உ[illegible] நாட்டியங்களும், விம்மும் மார்பகக் காட்சிகளும் இல்லை விட்டால் படம் ஓடாது என்று தற்காலத்தில் பொதுவாகக் கூறப்படுவது எவ்வளவு பெரிய பொய் என்பதை "சக்ரதாரி" நிரூபிக்கிறது. இது ஆபாச மற்ற ஒரு உன்னதப்படம். பக்தி ரஸத்தைப் பாழ் படுத்தும் அம்சம் எதுவும் இதிலில்லை. பணவசூலைப் பெறுவதற்கென பிரத்தியேக முயற்சிகள் எதுவும் செய்யப் படவில்லை. ஆனால் ஜனங்கள் என்னவோ போட்டி போட்டுக் கொண்டு போய்ப் பார்க்கிறார்கள்"

பக்தர் கோரா கும்பரின் கதையே "சக்ரதாரி" என்று படமாக்கப்பட்டிருக்கிறது. கோரா ஒரு குயவன்; பக்திமான். தன் தொழிலையும் புறக்கணித்து விட்டு பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டதால் அவரது குடும்பத்தைத் தரித்திரம் பிடித்துக் கொள்ளுகிறது. ஒரு நாள் கோராவின் மனைவி துளஸி குழந்தை ஹரியைகோராவிடம் ஒப்படைத்து விட்டு வெளியே போகிறாள். மண் மிதித்துக் கொண்டிருந்த கோராவுக்குப் பாண்டுரங்கனின் ஞாபகம் வந்து விடுகிறது. குழந்தை காலடியில் வந்தது கூடத் தெரியாமல் அதையும் மண்ணோடு மண்ணாக மிதித்து விடுகிறார்.

வெளியிலிருந்து வந்த துளஸி விஷயத்தை அறிந்து துடிக்கிறாள் அதிக கோபத்துடன் பாண்டுரங்கனின் விக்ரகத்தை உடைக்கப் போகிறாள். கோரா தடுத்து, அவளை ஒரு கோடறியால் தாக்கப் போகிறார். அவள் "பாண்டுரங்கன் மீது ஆணையாய் தொடாதீர்" என்கிறாள். அன்று முதல் இருவருக்கும் தேக ஸ்பரிசம் இல்லாமற் போய் விடுகிறது.

குழந்தையைப் பறிகொடுத்த துளஸி, சந்ததி விருத்தி இல்லாமற் போய் விடுமே என்ற எண்ணத்தாலும், குழந்தை ஒன்று வீட்டிலிருக்க வேண்டும் என்ற பாசத்தாலும் தன் கணவருக்கு தன் தங்கை சாந்துவையே இரண்டாந்தாரமாகக் கலியாணம் செய்துவைக்கிறாள். ஆனால் துளஸியின் தந்தை, 'நீங்கள் சாந்துவையும் துளஸி போலவே நடத்த வேண்டும்" என்று கோராவிடம் வாக்குறுதி பெறுகிறார். எனவே சாந்து கலியாணம் ஆகியும் கன்னியாகவே வாழும்படியாகிறது.

ஒரு நாள் துளஸியும் சாந்துவும் கோராவின் மனதை மாற்றுவதற்காக அவர் தூங்கும் போது அவரது கைகளை வருடுகின்றனர். விழித்துக் கொண்ட கோரா அவர்களை கடிந்து விட்டு, தம் கைகளையும் வெட்டிக் கொள்ளுகிறார்.

கோராவுக்கு கொடுத்திருந்த கடனுக்காக, அவரது வீட்டை ஏலத்திற்குக் கொண்டு வருகிறாள் அவரது அண்ணன் மனைவி. அதற்கு மேல் கோராவை சோதிக்க விரும்பாத பாண்டுரங்கன் மாறு வேஷத்தில் வந்து, வீட்டைத்தாமே ஏலத்தில் எடுத்துக் கொள்கிறார், கோராவை அதே வீட்டிலிருத்தி, அவருக்குப் பணி விடை செய்கிறா பகவான். பிறகு கோராவைத் தேடி வந்த நாமதேவர் மூலம் விஷயம் வெளியாகிறது. பாண்டுரங்கன் கோராவுக்கு இழந்த கைகளையும் இறந்த குழந்தையையும் கொடுத்தருள்கிறார்.

இந்தக் கதை "சக்ரதாரி"யில் மிக அழகாகச் சித்திரிக்கப் பட்டிருக்கிறது. சம்பவங்கள் கூடவோ குறையவோ இல்லாமல் அளவுடன் பொருத்தப் பட்டுள்ளன. காக்கையைப்பார்த்த கோராவுக்கு அந்த நிறமுடைய பாண்டுரங்கனின் ஞாபகம் வருவது, சட்டை வந்து விழும்போது துளஸிக்குத் தன் குழந்தையின் ஞாபகம் வருவது போன்ற மனோதத்துவங்களை டைரெக்டர் படம் பூராவிலும் பல இடங்களில் புகுத்தி, பாத்திரங்களின் குண விசேஷங்களையும், அவர்களின் ஆழ்ந்த எண்ணங்களையும் நாம் தெளிவாக தெரிந்து கொள்ளும்படிச் செய்திருப்பது பாராட்டத் தக்கது. இந்த அம்சங்கள் படத்

திற்கு ஜீவனை அளிக்கின்றன. நாம் படம் பார்க்கிறோம் என்பதையே சில இடங்களில் மறக்கும்படியாகி விடுகிறது. கோரா குழந்தையை மிதித்தபின் துளஸி கதறும் போது கல்மனதுடைய வர்களும் கண்ணீர் விட்டுவிடுவர்.

டைரெக்டர் கோபால கிருஷ்ணனுக்கு படத் தொழிலின் பல துறைகளிலும் நீண்ட நாள் அநுபவம் உண்டு ஆனால் டைரெக்ஷன் பொறுப்பை பூரா வாக அளித்தால் பிரமாதமாகச் செய்து விடுவார் என்பதை "சக்ரதாரி" நிரூபிக்கிறது. முதல் படத்திலேயே அபாரமான வெற்றி பெற்றதற்காக அவரை மிகப் பாராட்டுகிறோம்.

படத்தில் பாத்திரங்களையும், சூழ் நிலையையும் பொருத்தமாய் அமைப்பதற்கு முயற்சிக்கப் பட்டிருக்கிறது. ஆனால், வசனங்கள் பாத்திரத்திற்குப் பொருத்தமாக எழுதப்படவில்லை. சுப்பையா பிள்ளை பேசும் வசனங்களைக் கேட்கும் போது,'இதுபோலவல்லவோ மற்ற பாத்திரங்களும் பேசியிருக்க வேண்டும்' என்ற எண்ணம் ஏற்படுகிறது.

படத்தில் காதுக்கினிய சங்கீதம் நிரம்பியிருக்கிறது. சாகித்தியங்கள் அர்த்த புஷ்டியுடன் விளங்குகின்றன. சங்கீத டைரெக்ஷன் திறமையுடன் செய்யப் பட்டுள்ளது. சங்கீதம் இப்படத்தின் சிறந்த அம்சங்களில் ஒன்றாகும்

பக்திமான்களின் வேஷங்களை பாத்திர மறிந்து அப்பாத்திரமாகவே மாறி நடிப்பதில் இந்தியா பூராவிலுமே நாகய்யாவுக்கு இணை அவர்தான். கோராகும்பரின் வேஷம் அவருடைய முந்தின வெற்றிகளுக்கோர் சிகரமாக விளங்குகிறது என்று சொல்வதே போதும். புஷ்ப வல்லி சோக நடிப்பை இவ்வளவு திறமையாக நடிக்கக் கூடும் என்று நான் நினைக்கவேயில்லை. ஒரு உத்தம மனைவியின் பாத்திரத்தை அவர் பிரமாதமாய் நடித்திருக்கிறார்.

நாராயணராவுக்கும், பொட்டை கிருஷ்ணமூர்த்திக்கும் நிறைய சந்தர்ப்பம் அளிக்கப் பட்டிருக்கின்றன. படம் பார்ப்பவர்களைச் சிரிக்க வைக்குப் பொறுப்பை அவர்கள் சரிவர நிறைவேற்றி யிருக்கின்றனர். சுப்பையா பிள்ளை கொஞ்ச நேரம்தான் திரையில் தோன்றுகிறார். இருந்தாலும் அவருடைய பேச்சும் நடிப்பும் மனதைக் கவருகின்றன.

சூர்யப் பிரபா எதிர்காலத்தில் அதிகம் சோபிக்கக் கூடியவர் என்று இப்படத்தில் நிரூபிக்கிறார். கே. என். கமலம் பாத்திரத்திற்கு பொருத்தமாய் நடித்திருக்கிறார். 'நாகர்கோயில் மஹாதேவனும் இப்படத்தில் இருக்கிறார்' என்று மட்டுமே சொல்ல வேண்டியிருக்கிறது.

பாண்டுரங்கனாக நடித்த கணேஷ், வெற்றிலைக்காரியாக நடித்த எஸ். ஆர். லக்ஷ்மி, பாக்கு விற்பவனாக நடித்த புதுக் கோட்டைச் சீனு ஆகியோரது நடிப்பும் பரவாயில்லை.

படத்தில் ஒலி, ஒளிப்பதிவுகள், எடிட்டிங், காட்சி அமைப்பு, ஆடையாபரண அலங்காரம், மேக்கப் இவையெல்லாம் ஜெமினிக்கு இயல்பான உயர்ந்த முறையில் உள்ளன. படத்தில் நல்ல தமாஷாக விளங்கும் தந்திரக் காட்சிகளைத் தயாரித்த தம்புவைத் தனியாகப் பாராட்ட வேண்டும்.

"சக்ரதாரி" ஆபாசமற்ற ஒரு அழகான படம் இதை அனைவரும் தாராளமாய்ப் பார்க்கலாம். பி. ஆர். எஸ்.

மணமுள்ள சிவபுரி புகையிலை

TRADE MARK
சாந்தா வாசனை
சாந்தா விலாஸ் புகையிலை
SANTHA
விலாஸ் புகையிலை
S.DASS RAO TANJORE

தயாரிப்பவர்கள்:
S. தாஸ் ராவ்

சாந்தா விலாஸ் புகையிலை பாக்டரி
ஐயன் கடை — தஞ்சாவூர்.

என்ன தம்பி
என்னைத்
தெரியல்லையா!
நான் "நல்லதம்பி"
இல்லியா!

பத்திரிகையின் அடிப்
பாகத்தில் கண்களை
வைத்துப் பார்க்கவும்

புஷ்பவ

வாழ்க்கை வர்ணனை

ஒரு நாள் பிற்பகல், நான் என் ஆபீஸில் சில 'ப்ரூப்' களைத் திருத்திக் கொண்டிருந்தேன். திடீரென்று, "என்ன, ஸார். உங்கள் அபிப்பிராயம் என்ன? நீங்கள் பார்த்து விட்டீர்களா?" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்தேன்.

நண்பர் கே. ஜி. ஜகம் என் பதிலை எதிர்பார்த்தபடி எதிரே நின்றார். அவரை உட்காரும்படி ஆசனத்தைச் சுட்டிக் காட்டியபடியே, "எந்தப் படத்தைப் பற்றி விசாரிக்கிறீர்கள் என்று சொல்லவில்லையே!" என்று கூறினேன்.

"ஓ! மறந்து விட்டேன்! நியூ எல்பின்ஸ்டனில் வெளிவந்திருக்கிறதே, அந்த மோஹினி பஸ்மாஸுராவைப் பற்றித்தான்" என்றார்.

"நான் அந்தப் படத்தைப் பார்க்கவில்லை, நீங்கள் பார்த்தீர்களோ?"

"நேராக அங்கிருந்துதான் வருகிறேன். எப்பொழுதும் ஆங்கிலப் படங்களையே காட்டும் (சென்னை) நியூ எல்பின்ஸ்டனில் திடீரென்று இந்தத் தெலுங்குப் படத்தை வெளியிட்டிருக்கிறார்களே, பிரமாதமான படமாயிருக்கும் என்று நினைத்துப் போனேன். அப்படியொன்றுமில்லை. ஆனால் அதில் மோஹினியாக நடிக்கும் பெண் பம்பரம் போல் நடனம் ஆடுகிறாள். ரொம்ப நன்றாய் இருக்கிறது. அடேயப்பா, அவளுடைய கை கால்களெல்லாம் அசல் பாம்பு போல் நெளிகின்றன."

நண்பர் மிகப் புகழ்ந்த அந்தப் பெண் யாரென்று நினைக்கிறீர்கள்? சமீபத்தில் வெளிவந்திருக்கும் ஜெமினி சக்ரதாரி தமிழ்ப் படத்தில் நடித்திருக்கும் ஆந்திர-தமிழ் நடிகையான இதே புஷ்பவல்லிதான்



•முகில்•

அந்தப் படத்தில் மோஹினியாகத் தோன்றி, அழகாக நாட்டியம் ஆடிப் புகழ் பெறறவர்.

நண்பர் சொன்னது போல் மோஹினி பஸ்மாஸுரா படம் என்னவோ அவ்வளவாக வெற்றி பெறவில்லை. ஆனல், புஷ்பவல்லிக்கு அப்படம் சினிமா உலகில் ஒரு நல்ல பெயரை ஏற்படுத்தி வைத்தது.

புஷ்பவல்லி அதற்கு முன்பே இரண்டு படங்களில் நடித்திருந்தார். 1936 ம் வருஷத்தில் ராஜமஹேந்திர புரத்தைச் சேர்ந்த ஸ்ரீ துர்கா ஸினி டோன் என்ற கம்பெனியார் சம்பூர்ண ராமாயணம் என்ற தெலுங்குப் படத்தைத் தயாரித்தனர். இந்தப் படம்தான் புஷ்பவல்லியை சினிமா ரஸிகர்களுக்கு அறிமுகப் படுத்தி வைத்தது. அந்தப் படத்தில் நடிக்கும் போது புஷ்பவல்லிக்கு சுமார் பன்னிரண்டு வயதுதான் நிரம்பி யிருந்தது.

பிரபல ஆந்திர டைரெக்டர் ஸி. புல்லய்யா அநேக புதிய முகங்களை நக்ஷத்திரங்களாக ஆக்கி யிருக்கிறார். பிறரால் கண்டுபிடிக்கப்பட்ட அநேக புதிய முகங்கள் அவரது டைரெக்ஷனுக்கு வந்ததும் நக்ஷத்திரங்களாகி யிருக்கின்றனர். இந்த இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவர்தான் புஷ்பவல்லி.

சம்பூர்ண ராமாயணத்தில் புஷ்பவல்லியின் நடிப்பைப் பார்த்த ஸி. புல்லய்யா அவர் (புஷ்பவல்லி) எதிர்காலத்தில் ஒரு சிறந்த நடிகை ஆகக்கூடும் என்று யூகித்தார். அதற்கிணங்க தாம் தயாரித்துக் கொண்டிருந்த சல் மோஹன ரங்காவிலும், அதன் பிறகு மோஹினி பஸ்மாஸுராவிலும், மற்றும் தாம் தயாரித்த சில படங்களிலும் அவரை நடிக்கச்செய்தார். ஒவ்வொரு படத்திலும் புல்லய்யா எதிர் பார்த்த படியே புஷ்பவல்லி அபிவிருத்தி அடைந்து வந்தார்.

தெலுங்கு தேசத்தில் படச் சிறப்பிலும், வசூலிலும் ஒரு பரபரப்பை உண்டு பண்ணிய படம் வர விக்ரயம் ஆகும். சீர்திருத்த நோக்கங்கள் நிறைந்த இந்த சமூகப் படம் புஷ்பவல்லிக்கும், பிரபல நடிகை பானுமதிக்கும் நிறையப் புகழைச் சம்பாதித்துக் கொடுத்தது. இவ்விருவரும் அப்படத்தில் (சகோதரிகளாக) திறமையுடன் நடித்திருக்கிறார்கள். இந்தப் படத்தில் மட்டுமன்றி புல்லய்யாவின் அடுத்த படமான மாலதி மாதவம் தெலுங்குப் படத்திலும் இருவரும் சேர்ந்து நடித்திருக்கிறார்கள். இந்தப் படத்திலும் அவர்கள் நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொண்டார்கள்.

அதன் பிறகு புஷ்பவல்லி தசாவதாரம், தாரா-ச-சாங்கம், சூடாமணி, சத்தியபாமா ஆகிய தெலுங்குப் படங்களில் நடித்தார். தாரா-ச-சாங்கம் பழைய டைரெக்டர் ஆர். பிரகாஷாலும், சூடாமணி காலஞ்சென்ற ராஜா சாண்டோவாலும், சத்தியபாமா பிரபல டைரெக்டர் ஒய். வி. ராவாலும் டைரெக்ட் செய்யப்பட்டவை என்பது குறிப்பிடத் தக்கது. இப்படங்கள் மூலம் அவரது பிராபல்யம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து வரலாயிற்று. பிறகு, வந்த

ஜெமினியின் பாலநாகம்மா படம் ஆந்திர தேசத்திலும், தமிழ் நாட்டிலும் இணையற்ற வகையில் ஓடி அதன் முதலாளிக்கு மிகுந்த புகழையும், பணத்தையும் சம்பாதித்துக் கொடுத்தது நேயர்களுக்கு ஞாபகமிருக்கும். படத்தின் முதலாளிக்கு மட்டுமின்றி, அந்தப் படத்தில் சம்பந்தப்பட்ட புஷ்பவல்லிக்கும் அதிருஷ்டத்தை ஏற்படுத்தியது.



பாலநாகம்மாவில் நடிக்கச் சென்ற புஷ்பவல்லியை ஜெமினி ஸ்டுடியோக்காரர்கள் நிரந்தர சம்பளத்தில் ஒரு நடிகையாய் அமர்த்திக் கொண்டு விட்டனர்.

தெலுங்கு பாலநாகம்மா மூலம் தமிழ் நாட்டவர்களின் பாராட்டுதல்களைக்கூட சம்பாதித்துக் கொண்ட புஷ்பவல்லியை ஜெமினிக்காரர்கள் ஒரு தமிழ் நடிகையாகவே மாற்றி, தமிழ்ப் பட ரஸிகர்களின் பூரண ஆதரவையும் அவருக்கு வாங்கிக் கொடுப்பதென்று தீர்மானித்தனர். அதன்படி அவருக்குத் தமிழைக் கற்றுக் கொடுத்து, தங்கள் தாஸி அபரஞ்சி தமிழ்ப் படத்தில் அவரை முதன் முதலாக நடிக்கும்படி செய்தார்கள்.

புஷ்பவல்லி இயற்கைத் தோற்றத்திலும் சரி, படத்திலும்சரி, ஒருங்கே அழகுடையவர். ஆகவே அந்த 'ஆயிரம் பொன் தாஸி'யின் வேஷத்திற்கு அவர் மிகவும் பொருந்தி



சூடாமணி

பிருந்தார். படத்திற்காகக் கற்றுக் கொண்ட சம்பாஷணைகளையும் சுமாராகப் பேசி யிருந்தார். அவரது நடிப்பும், ஆட்டமும் ரசிகர்களின் மனதைக் கவர்ந்தன.

அபராஞ்சிக்குப் பின் புஷ்பவல்லியை ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி பிக்சர்ஸார் தயாரித்த பாதுகா தெலுங்குப் படத்தில் சீதையாக நடிக்க ஜெமினி அநுமதித்தது. இந்தப் படத்தில் அவரது தோற்றம், நடிப்பு இரண்டுமே திருப்தி அளிக்கவில்லை.

இதன் பின்னர் ஜெமினியின் மிஸ் மாலினி படம் வெளி வந்தது. அதில் புஷ்பவல்லியின் நடிப்பும் பேச்சும் நன்கமைந்தன.

இந்த சமயத்தில் புஷ்பவல்லியின் சொந்த முயற்சியால் வைஜயந்தி பிலிம்ஸ் தோன்றி, ஜெமினியின் கூட்டுறவோடு விந்தியாராணி என்ற தெலுங்குப் படத்தைத் தயாரித்தது. ஆனால், இந்த முயற்சி தோல்வியாகவே முடிந்தது.

புஷ்பவல்லி கடைசியாக நடித்துள்ள படம் சக்ரதாரி. இதில் அவர் கோராகும்பரின் மூத்த மனைவி துளசியாக மிக அருமையாய் நடித்திருக்கிறார். அவர் நடித்திருக்கும் தமிழ் தெலுங்குப் படங்கள் எல்லாவற்றையும் விட சக்ரதாரியில்தான் அவரது நடிப்பு மிக தத்ரூபமாய் அமைந்திருக்கிறது. சோக நடிப்பிலும் தமக்கு நல்ல திறமை உண்டு என்பதைபுஷ்பவல்லி இப்படத்தின் மூலம் நிரூபித்து விட்டார்.

புஷ்பவல்லிக்கு ஆடத் தெரியும்; ஆனால் பாடத் தெரியாது. ஜெமினி படங்கள் எல்லாவற்றிலும் அவருக்கு குமாரி ரத்தினத்தின் இனிய குரல் இரவல் வாங்கப்பட்டிருக்கிறது. உதட்டசைப்பையும், பாட்டின் ஒலியையும் சேர்த்துப் பொருத்துவதில்

பாலநாகம்மா.

ஜெமினிக்காரர்கள் கைதேர்ந்து போயிருப்பதால், 'ஒருவேளை புஷ்பவல்லியே தான் பாடுகிறாரோ' என்று ரஸிகர்களுக்குத் தோன்றியிருக்கக்கூடும்.

தற்போது தமிழ்ப்பட உலகில் புகழுடன் விளங்கும் ஆந்திர மும்மணிகளில் புஷ்பவல்லி ஒருவராவார். அவரது சொந்த ஊர் மேல் கோதாவரி ஜில்லாவிலுள்ள பெந்தபாடு என்ற கிராமமாகும். அவரது தகப்பனாரான ஸ்ரீ. கே. தாத்தாச்சாரி தொண்டாவரம் என்ற ஜமீனின் மூத்த சொந்தக்காரராவார். புஷ்பவல்லியின் தாயாரது பெயர் கோட்டம்மா.

ஆந்திர வைஷ்ணவ பிராமண ஜாதியைச் சேர்ந்த புஷ்பவல்லி, தாம் சினிமாவில் சேர்ந்த ஆரம்ப காலத்திலேயே தம் தாய்மாமனை ஸ்ரீ. ஐ. வி. ரங்காச்சாரியை மணந்து கொண்டு விட்டார். ஸ்ரீ. ரங்காச்சாரி சென்னையில் வக்கீல் தொழில் நடத்தி வருகிறார். இவரும் நிறைய பூர்வீக சொத்துடையவர். ஆங்கிலத்தில் கவிதைகள் எழுதுவது இவரது பொழுது போக்கு.

பிறந்த இடத்திலும் சரி; புகுந்த இடத்திலும் சரி, நிறைய சொத்துள்ள புஷ்பவல்லியை பால்யத்திலேயே சினிமாப் பைத்தியம் பிடித்துக் கொண்டு விட்டது. அதே ஆர்வந்தான் அவர் ஒரு சிறந்த நடிகை ஆவதற்கும் துணை நின்றிருக்கிறது. கடைசியாக நடித்துள்ள படங்களில் அவரது நடிப்பில் நல்ல மெருகு ஏறி வருவதற்குக் காரணம் அவரது சிரத்தையே.

நடுத்தர உயரமும், சிவந்த மேனியும், அழகிய கண்களும் கொண்ட

மிஸ் மாலினி.

புஷ்பவல்லிக்கு இப்பொழுது சுமார் இருபத்தைந்து வயதாகிறது. அவர் தம் ஓய்வு வேளைகளை வீணாக்காமல் எதையாவது படித்தவண்ண மிருப்



பார். அவருக்குத் தமிழ், ஹிந்தி ஆகிய பாஷைகளைப் பேசமட்டும் தெரியும். தம் தாய் பாஷையான தெலுங்கு இலக்கியப் பரீஷைகளில் அவர் கலந்து கொண்டிருப்பதாகக் கேள்வி. மிஸ் மாலினியில் சூர்யப் பிரபா என்ற ஒரு புதிய நடிகையை ஜெமினி அறிமுகப் படுத்தி யிருப்பதும், அதே நடிகை சக்ரதாரியில் நடிப்பதும் நேயர்களுக்குத் தெரியும். அவர் முகச் சாயலைப் பார்த்த ரஸிகர்கள், "இவர் ஒரு வேளை புஷ்பவல்லியின் தங்கையாக இருப்பாரோ?" என்று சந்தேகித்திருக்கக் கூடும். அச்சந்தேகம் சரியானதே. சூர்யப் பிரபா புஷ்பவல்லியின் சொந்தத் தங்கைதான். அக்கா சினிமா உலகில் அடைந்து வரும் வெற்றியைப் பார்த்ததும் தாமும் சினிமாவில் நடிக்க வேண்டுமென்று தங்கைக்குத் தோன்றியதில் ஆச்சரியமென்ன?

சுமார் ஐந்து மாதங்களுக்கு முன் புஷ்பவல்லிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்திருக்கிறது. "இந்தக் குழந்தையும் பெரிதானவுடன் தாயாரைப் போலவே சினிமாவில் நடிக்குமா?" என்று கேட்க நினைக்கிறீர்கள். "பெரிதாய்ப் போனால்" என்று கேட்பதற்கே இடமில்லை. "பிறப்பதற்கு முன்பே"யே அது சக்ரதாரி படத்தில் நடித்து விட்டது. அதன் நடிப்புதான் நம் கண்களுக்குப் புலப்படவில்லை!

"சக்ரதாரி"யில் புஷ்பவல்லி

புஷ்பவல்லி

மாடர்ன் தியேட்டர்ஸின்
"ஆதித்தன் கனவி"ல்
அஞ்சலி தேவி

கிடைக்காத பேட்டி...

நிகழாத சம்பவம்

"யாரோ உங்களைப் பார்க்கணும்னு வந்திருக்காங்க" என்றான் வேலைக்காரன். சினிமா நடிகர் ராம்பாலுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. 'யார் அந்த மனிதர்? பத்திரிகை நிருபரோ? பார்க்க முடியாதென்று சொல்லு, போ!" என்று எரிந்து விழுந்தார்.

"பத்திரிகை நிருபர் இல்லிங்க, யாரோ உங்க மாமா பிள்ளையாம்" என்றான் வேலைக்காரன்.

"மாமா பிள்ளையா? எனக்கு மாமாவே கிடையாதே! எதற்கும் அவரை வரச் சொல்லு. நேரிலேயே விசாரித்துப் பார்க்கிறேன்."

சில நிமிஷங்களுக்கெல்லாம் "சௌக்கியந் தானே?" என்று கேட்டவண்ணம் ஒரு புதிய மனிதர் அந்த அறைக்குள் நுழைந்தார். ராம்பால் அவரைச் சற்று மரியாதையாகவே வரவேற்று, "உட்காருங்கள்" என்று உபசரித்தார்.

"இன்று உங்களைப் பார்க்க முடியும் என்றே நான் நினைக்க வில்லை. உங்களுடையவேலைக்காரன் அத்தனை கண்டிப்பான மனுஷனாயிருந்தான், 'யாரும் உள்ளே போகக் கூடாது' என்று நிர்தாட்சண்யமாகச் சொல்லி விட்டான்."

"அதற்கு அவன் பொறுப்பாளியல்ல. என்னுடைய உத்தரவைத்தான் அவன் நிறைவேற்றியிருக்கிறான்."

,'இங்கே யாருமே வரப்படாதோ?" என்று கேட்டார் வந்தவர்.

"வரப்படாதென்பதில்லை. சாதாரணமாக இங்கு வர முயற்சிப்பவர்களெல்லாரும் பத்திரிகை நிருபர்கள் தான், எனக்கு அவர்களைக் கண்டாலேயே பிடிக்காது. அதனால் தான் வேலைக்காரனுக்குக் கண்டிப்பாக உத்தரவிட்டிருக்கிறேன்."

"ஓகோ! சரிதான்! அது போகட்டும். நான் வந்த காரியத்தைச் சொல்லுகிறேன். நான் ஒரு சினிமா விசிறி. நீங்கள் நடித்துள்ள படங்களையெல்லாம் ரஸித்து வருபவன்."

"அப்படியானால் நீங்கள் என் மாமா பிள்ளை இல்லையா! இவ்விதம் பொய் சொன்னதற்காக உங்களைப் போலீஸில் ஒப்படைத்தால் என்ன?"

"பேஷாகச் செய்யலாம்? அதற்கு நான் தயாராகத்தான் இருக்கிறேன். இன்னும் இறப்பதற்குக் கூட நான் தயாராகவே இருக்கிறேன்."

"என்ன! மரணத்திற்கா!"

"ஆமாம். என்னுடைய மனோநிலைமை அப்படி இருக்கிறது. இன்று மட்டும் நான் வந்த காரியம் நிறைவேறாமல் போகுமானால் நான் நிச்சயமாகத் தற்கொலை செய்து கொண்டு

இறக்கத்தான் போகிறேன். இன்னும் உண்மையைக் கூறப் போனால், என்னுடைய பிராணன் உங்கள் கையில்தான் இருக்கிறது!''

"பேஷ் பேஷ்! உங்களுக்கு ஏதாவது பைத்தியம் பிடித்திருக்கிறதா?''

"பைத்தியம் என்றுதான் வைத்துக் கொள்ளுங்களேன். அதை சினிமாப் பைத்தியம் என்று சொல்லுவதில் பிசகொன்றுமில்லை.''

பண்டித
டி. எஸ்.
சந்தானம்

"சினிமா பைத்தியமா?''

"ஆமாம்? உங்கள் சிபார்சினால் எப்படியாவது ஒரு சினிமா கம்பெனியில் சேர்ந்து, ஒரு நடிகராக வேண்டும் என்பதே என் ஆவல்.''

"பேஷ்! அதற்காகத்தான் இக்கு வந்தீர்களாக்கும்?''

"ஆமாம். அது விஷயமாக நீங்கள் எனக்கு உதவி செய்ய வேண்டும்.''

"இப்படி அசட்டுத் தனமாகப் பேசிக்கொண்டிருக்காதீர்கள். சினிமா நடிகராகப் போவது ரொம்ப சுலபம் போலிருக்கிறது? இந்த ஐந்து வருஷமாக நான் சிரமப்பட்டிருப்பது அந்த ஈசுவரனுக்குத்தான் தெரியும்! என் ஜென்ம விரோதியைக் கூட 'சினிமாவில் நடிக்கப் போ' என்று நான் சொல்ல மாட்டேன்.''

"இப்படி யெல்லாம் சொன்னால் நான் ஏமாந்து விடுவேன் என்று நினைக்கிறீர் போலும்? ஒரு நாளும் இல்லை. எவ்வளவு சிரமமிருந்தாலும் நான் அனுபவிக்கத் தயார்!''

"உங்களுக்குச் சினிமா விஷயம் ஒன்றும் தெரியாது போலிருக்கிறது. தயவு செய்து வந்த வழியே போய் விடுங்கள்!''

"அதற்காகவா நான் இக்கு வந்தேன். எனக்கு ஏதாவது ஒரு வழி காண்பித்தால் தான் நான் போவேன். இல்லா விட்டால் தற்கொலை செய்து கொண்டு பிராணனை விட்டு விடத்தான் போகிறேன் நான்.''

"இது ஏதுடா பெரிய சங்கடமாய்ப் போய்விட்டது! ஏன் ஐயா, சினிமாவுக்குத் தகுந்த யோக்யதை உங்களுக்கு அப்படி என்ன விசேஷமாக இருக்கிறது?''

"என்ன யோக்யதையா? நடிப்பு, பேச்சுத் திறமையில் என்னுடன் யாரையாவது போட்டி போடச் சொல்லுங்கள் பார்க்கலாம்!''

"நடிப்புத் திறமை இருந்து விட்டால் போதுமா? சங்கீதம் தெரியவேண்டாமா?''

"சங்கிதமா? எவ்வளவு சபைகளில் கச்சேரி செய்திருக்கிறேன், உங்களுக்குத் தெரியுமா?''

"கச்சேரி சங்கீதம் சினிமாவுக்கு சரிப்படாது. போய் விட்டு வாருங்கள்.''

"ஏதோ சாக்குப் போக்குசொல்லுகிறீரே தவிர, கொஞ்சம் கூட என் மேல் இரக்கம் காண்பிக்க மாட்டேன் என்கிறீர்களே?''

"உங்கள் மீது இரக்கப்பட்டுத்தான் இப்படிச் சொல்லுகிறேன். சினிமாவுக்கு வந்தால் டைரெக்டர் சொல்லுகிறபடி யெல்லாம் ஆட வேண்டும்.''

"டைரெக்டர் சொல்லுகிறபடியா...?''

"ஆமாம்! கட்டாயம் அவர் சொல்லுகிறபடி யெல்லாம் ஆடித் தொலைக்க வேண்டும்.''

"ஆடா விட்டால்?''

"உங்கள் பெயரை முன்னுக்கு வராதபடி செய்து விடுவார்!''

"அப்படியானால் டைரெக்டர்கள் பொல்லாதவரென்று சொல்லுங்கள்?

"பொல்லாதவர் மாத்திரமா? படம் குட்டிச் சுவராவதற்கெல்லாம் அவர் தான் முழுப் பொறுப்பாளி?"

"அப்படியானால் டைரெக்டர் என்று ஏதுக்கு வைத்திருக்கிறீர்கள்? அவர் இல்லாவிட்டால் என்னவாம்?"

"இல்லா விட்டால் ரொம்பவும் நல்லது தான். படங்களும் உருப்படும். ஆனால் டைரெக்டர்களின் உதவி இல்லாமல் படம் எடுப்பதற்கு யார் துணிகிறார்கள்? அதனால் தான் டைரெக்டர் சர்வாதிகாரியாக விளங்குகிறார். அவர் ஆடு என்றால் ஆட வேண்டும். ஓடு என்றால் ஓட வேண்டும். அதற்குத் தான் சொன்னேன்; சினிமாத் தொழிலே மகா கஷ்டமான தொழில். இது எல்லாம் உங்களுக்கு லாயக்கில்லே. பேசாமல் போய்ச்சேரும்."

"நான் இந்த இடத்தை விட்டுப் போகவேமாட்டேன். யாராவது ஒரு பட முதலாளிக்கு நீங்கள் ஒரு சிபார்சுக் கடிதம் கொடுத்தால்தான் நான் போவேன்!"

"இதோ பாருங்கள். உங்களுக்குப் பயித்தியந்தான் பிடித்திருக்கிறது. தயவு செய்து வெளியே போய்விடுங்கள். இல்லா விட்டால் போலீசுக்குச் சொல்லி அனுப்புவேன். போங்கள். சீக்கிரம்!"

* * *

மேற் கூறிய சம்பவம் நடைபெற்ற மறுநாள் 'சித்திர உலகம்' பத்திரிகையில் பின்வரும் செய்தி கொட்டைஎழுத்துக்களில் பிரசுரிக்கப்பட்டிருந்தது:

"டைரெக்டர்களே இல்லாவிட்டால் படங்கள் எவ்வளவோ நன்றாக இருக்குமாம்"......பிரபல சினிமா நடிகர் மிஸ்டர் ராம் பால் கூறுகிறார்.

எங்கள் விசேஷ சினிமா நிருபர் 'சந்துட்டி' மிஸ்டர் ராம் பாலைப்பேட்டி கண்ட விபரம் கீழே விரிவாக பிரசுரிக்கப் பட்டிருக்கிறது. —ஆசிரியர்.

குண்டூசியைக் கேளுங்கள்

டி. பழனியப்பன்
(உடுமலைப் பேட்டை)

வஸந்தாவின் சொந்த ஊரும், பெயரும் என்ன என்பதைக் கட்டாயம் தெரிவிக்கவும்.

குன்னக்குடி வள்ளிக் கண்ணைப் பற்றி நீர் இது நாள் வரைத் தெரிந்து கொள்ளாதது ஆச்சரியமே!

வி. ராம்தாஸ் (தஞ்சை)

காளி என். ரத்தினத்திற்கு வி. டி. ராஜகாந்தம் சொந்த மனைவியா?

அப்படி இல்லாததால் தானே தொல்லையெல்லாம்!

ஆர். பிச்சாண்டி (இலங்கை)

சினிமாப் படங்களில் வானத்தில் உள்ள அசல் நக்ஷத்திரங்களைப் படம் பிடித்துக் காட்ட முடியுமா?

அந்த நக்ஷத்திரங்களைக் காட்டினால் படத்திற்கு எப்படி ஐயா லக்ஷக்கணக்கில் வசூல் ஆகும்?

இ. செல்வத் துரை
(அச்சுவேலி, யாழ்ப்பாணம்)

நான் நடிக்க விருக்கும் ஒரு படத்தின் டைரெக்ஷன் பொறுப்பைத் தாங்கள் ஏற்றுக் கொள்ள முடியுமா?

தங்கள் "பகற் கனவி"ற்கு ஒரு டைரெக்டர் கூட அவசியமா என்ன?

எம். ஜி. ஜீவகன் (அரக்கோணம்)

சந்திரலேகாவில் சசாங்கனாக நடித்த ரஞ்சன தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்?

அடுத்தபடியாக, அவர் ஜெமினியில் டைரெக்டர் ஆச்சார்யா தயாரிக்கப் போகும் ஒரு படத்தில் நடிப்பார் என்று தெரிகிறது.

எஸ். ஜி. பாலசுப்ரமண்யம்
(சேந்தமங்கலம்)

சந்திரலேகாவில் என். எஸ். கிருஷ்ணன் கடையாணி இல்லாமலே வண்டி ஓட்டுவது சரியா?

"ஆதித்தன் கனவி"ல் அதிதுடியாய் நடித்திருக்கிறாள் சிறுமி சிந்தாமணி. அவளது அம்மாவாய் நடித்திருக்கிறார் அஞ்சலி தேவி.

இதில் ஆச்சரியமென்ன, ஸ்வாமி! அவர் தான் முன்பே 'கடையாணி' இல்லாத அநேக படங்களை ஓடச் செய்திருக்கிறாரே?

கே. வி. எஸ். மூர்த்தி (கும்பகோணம்)

டி. ஆர். மஹாலிங்கத்திடம் போட்டோ கேட்டால் அனுப்புவாரா?

இப்பொழுதெல்லாம் அவர் தம்மைப் படம் பிடித்துக்கொள்ளுவதில் உத்ஸாகத்தை விட்டு விட்டார். அதற்குப் பதில் அவர் இப்போது ஒரு குட்டி சினிமா இயந்திரத்தை வைத்துக்கொண்டு தம் வீட்டிலுள்ளவர்களையெல்லாம் படம் பிடித்துக்கொண்டிருக்கிறார்!

கனவு நனவாகிவிட்டது! ஆதித்தன் அணைந்து கொண்டிருப்பது அசல் பெண்மணியே (அஞ்சலிதேவி)

என். வி. நாராயணன் (பெரிய குளம்)

சம்சார நௌகா படம் இதற்கு முன் கன்னடத்தில் வெளி வந்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அது உண்மைதானா?

உண்மையே தான். சுமார் 10 வருஷங்களுக்கு முன் வெளி வந்தது. அதிலும் பி. ஆர். பந்துலு தான் கதாநாயகன். ஆனால் தமிழ்ப் படத்தவ்வளவு மோசமாயிருக்கவில்லை அந்தக் கன்னடப் படம்.

கே. எல். காந்தன் (புவனகிரி)

முன்பு விப்ரநாராயணா என்றொரு படம் வெளி வந்திருக்கிறதா?

ஒரு படமாய்ப் போவானேன்? இரண்டு படங்கள் வெளி வந்திருக்கின்றன. மொத்தத் தோல்வியை இவை இரண்டும் சமமாகப் பகிர்ந்துக் கொண்டன.

கே. அப்பு நாயர் (கோயமுத்தூர்)

தமிழ்ப் படஉலகில் நடிக்கும் நம் ஆடவர்களுக்கு வர வர தொந்தி பெருத்து வருகிறதே? ஏன்?

புகழ் மிகுந்துவரும் நக்ஷத்திரங்களின் தொந்திகளே இவ்விதம்பெருத்து வருவதைப் பார்த்தால், அவர்கள் தம் புகழையெல்லாம் காப்பாற்றிக் கொள்ளுவதற்கு தம் தம் தொந்தியையே ஒளிவிடமாகக் கொள்ளுகிறார்களோ என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது!

ஆர். தேவராஜ் (ஆண்டர்சன் பேட்டை)

'வேதாள உலக'த்தில் தோன்றும் லலிதா பத்மினியை நான் மணக்க விரும்புகிறேன். இது சாத்தியமா?

ஒரே அம்பில் நீர் இரு பறவைகளை வீழ்த்தி விடப் பார்க்கிறீர்! ஆனால் உமது 'அன்பு' மிக்க இவர்களை நீர் இரண்டென்ன, இரு நூறு அம்(ன்)புகளால் கூட அடைய முடியாது என்பது என் அபிப்பிராயம்.

கே. ராஜகோபாலன் (பாலக்காடு)

வட இந்தியப் படங்களுக்கு தமிழ் நாட்டவர் அதிக ஆதரவு கொடுப்பது போல் தமிழ்ப் படங்களுக்கு வட நாட்டவர் ஆதரவு காட்டாத காரணமென்னவோ?

வட நாட்டவர்களே முதன் முதலின் சினிமாத் தொழிலில் ஈடுபட்டவர்கள். அவர்கள் முதலில் மௌனப் படங்களைத் தயாரித்து அனுப்பினார்கள் பிறகு பேசும் படங்களையும் அவர்களே முதலில் தயாரித்தனுப்பினார்கள். அதன் பின்னரே சுதேச பாஷைப் படங்கள் வெளிவரலாயின. இது மட்டுமல்ல, ஹிந்தி பேசுபவர்கள் இந்தியாவெங்கும் இருக்கின்றனர். இவை தான் அப்படங்களுக்குக் கிடைத்து வரும் பிரமாதமான ஆதரவுக்குக் காரணமாயிருக்க வேண்டும்.

எஸ். பி. சிவம் (ரெட்டைக்குளம்)

இரவல் குரல் கொடுத்து வரும் குமாரி ரத்தினம் எங்கிருக்கிறார்? அவரது விலாஸத்தைத் தெரிவிக்க முடியுமா?

சென்னை, மைலாப்பூரில், தெற்கு மாட வீதியில் இருக்கிறார்.

பாலகிருஷ்ணன் (மதராஸ்)

ஏ. சகுந்தலாவை நான் பார்க்க விரும்புகிறேன். சின்னப்பா சம்மதிப்பாரா?

நாமெல்லாம் சகுந்தலாவைப் பார்க்கக் கூடாது என்பதற்காகத் தானே, ஐயா, அவரைச் சினிமாவிலிருந்து விலக்கியிருக்கிறார், சின்னப்பா. இது தெரியவில்லையே உமக்கு!

"ஊசிப் பட்டாசு" (பண்ருட்டி)

சினிமாவுக்காக வாலிபர்கள் அதிகப் பணம் செலவழிக்கிறார்களா? அல்லது கிழவர்கள் அதிகம் செலவழிக்கிறார்களா?

கிழவர்கள் தான் என்று நினைக்கிறேன். ஏனென்றால் அவர்களால் தான் தாங்களாக வே டிக்கெட் வாங்க முடியாது. பிளாக் மார்க்கெட் ஆசாமிகளிடம் அதிக விலை கொடுத்து வாங்கவேண்டியிருக்கும்!

எஸ். ஆர். ஆர். நாதன் (விழுப்புரம்)

வி. எஸ். ஜெயராமன் ஏன் சினிமாவில் நடிப்பதை நிறுத்தி விட்டார்?

நிறுத்தியிருந்தார் என்பதே பொருத்தமாயிருக்கும். ஏனென்றால் சிக்கிரமே வெளிவரவிருக்கும் 'கிருஷ்ண பக்தி'யில் நீர் அவரைக் காணலாம்.

எஸ். வி. துரைராஜ் (தேனி)

நாம் இருவர் புகழ் ஜெயலக்ஷ்மிக்குக் கலியாணம் ஆகி விட்டதா? வயது என்ன? சொந்த ஊரும், ஜாதியும் என்ன?

சுமார் இருபது வயதான ஜெயலக்ஷ்மி இசை வேளாளர் குலத்தைச் சேர்ந்தவர். சொந்த ஊர் திருமலைராயன் பட்டணம். விவாஹம் ஆகிவிட்டது.

டி. எஸ். ஆர். சாமி (புதுக்கோட்டை)

எம். கே. டி. பாகவதரும், என். எஸ். கிருஷ்ணனும் விடுதலை அடைந்த பின்னர் ஏன் சேர்ந்து நடிக்கவில்லை?

ஒரே இடத்தில் அடைபட்டிருந்த அவர்கள் ஒரே படத்திலும் அடைபடுவதற்கு இஷ்டப்படாமைக்கு ஏதோ மனஸ்தாபத்தான் காரணமாம்.

கே. ஆர். நாராயணன் (சேலம்)

நேயர்கள் சதா கேள்வி கேட்டவண்ணமிருக்கிறார்களே, உமக்கு பதில் சொல்லுவதற்கு சலிப்பு ஏற்படுவதேயில்லையா?

நேயர்களின் கேள்விகளை 'சலிக்காமல்' படித்துவிட்டு, அவைகளில் நல்லவற்றை 'சலித்தெடுத்து', சலிப்பை உண்டுபண்ணாத வகையில் பதில் எழுதுவது என் தொழிலாயிற்றே?

கே. பி. கருணன் (ஒலவக்கோடு)

எனக்கு மோட்டார் ஓட்டத் தெரியும். ஏதாவதொரு சினிமா நக்ஷத்திரத்தினிடம் டிரைவராய் அமர விரும்புகிறேன். இது சாத்தியமா?

வெளியூர்களில் இப்பொழுது ஓடிக் கொண்டிருக்கும் முபாரக் "பில் ஹணு" தமிழ்ப் படத்தில் ஜெயஸ்ரீ, ஏ. ஆர். சகுந்தலா.

கோடிக் கணக்கில் தனம் இருந்தாலும் கொஞ்சிக் குலவுவதற்கு ஒரு குழந்தை இல்லாமல் எவ்வளவு பேர்கள் ஏங்குகிறார்கள்? இந்த ஏக்கத்தை புஷ்பவல்லி ஜெமினியின் "சக்ரதாரி"யில் அதி அழகாக நடித்துக் காட்டியிருக்கிறார்.

என்ன இருந்தாலும் இந்த மோட்டார் டிரைவர்களுக்கே 'நக்ஷத்திர மோஹம்' அதிகம் என்பது எனக்கு முன்பே தெரியும். அவர்கள் சாதாரண மனிதர்களைக் கூட சில சமயங்களில் நக்ஷத்திரங்களாக எண்ணிக் கொண்டு அவர்களை மண்ணுலகிலிருந்து விண்ணுலகிற்கு அனுப்பிவிடுகிறார்களல்லவா?

கே. ராமையா (கோலாலம்பூர்)

ராஜ குமாரி படத்தில் எம். ஜி. ராமச்சந்திரன் பாடுவது சொந்தக் குரலிலா?

இல்லை; எம் எம். மாரியப்பா என்பவரின் குரலை இரவல் பெற்றிருக்கிறார் என்று முன்பே நான் பதில் கூறியிருப்பது (தூரதேசத்திலிருக்கும்) உம் காதிற்கு எட்டவில்லை போலும்!

எம். ஹமீது (ஜாஸின், மலேயா)

பி. எஸ். கோவிந்தன் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்?

நாயுடு ஜாதியைச் சேர்ந்தவர் அவர்.

ஜே. ஆசீர்வாதம் (தஞ்ஜாவூர்)

தெலுங்கில் இரண்டு பால நாகம்மா படங்கள் வந்திருக்கின்றனவா?

ஆம்; வந்திருக்கின்றன.

பி. எஸ். முருகன் (திருச்சி)

ஒரு ஆதி திராவிடப் பையன் இருக்கிறான். அவன் மிக நன்றாய் பாடுகிறான். அவனை ஜாதி வித்தியாசம் பாராட்டாமல் படத்தில் நடிப்பதற்கு நம் படமுதலாளிகள் எடுத்துக் கொள்ளுவார்களா?

குறுகிய மனப்பான்மையுடைய ஒன்றிரண்டு பட முதலாளிகளைத் தவிர மற்றவர்கள் ஜாதி வித்தியாசம் பாராட்டக்காணோம். இன்னும் சொல்லப்போனால் முன்பே சில ஆதி திராவிடர்கள் நம் படங்களில் நடித்திருக்கிறார்கள்.

டி. கே. செல்வராஜ் (கொழும்பு)

இன்னமும் ஹரிஜனங்களை தமிழர்கள் அலக்ஷியம் செய்கிறார்களே இதைத் தடுக்க உம் கேள்வி பதில் பகுதி மூலம் நீர் ஏதேனும் செய்யக் கூடாதா?

என்னுடைய கேள்வி பதில் பகுதி சினிமாச் சீர்திருத்தம் சம்பந்தமானது. மேலும், இவ்விஷயத்தில் காந்திஜி சொல்லியுள்ளதைவிட நான் என்ன சொல்ல இருக்கிறது?

"மோஹினி"யை அடைவதற்காக குதிரையைப் பறக்க வைப்பது லேசான காரியமா? ஆர். பால சுப்ரமண்யமும், எம். என். நம்பியாரும் இப்படி வேர்க்க விறுவிறுக்க பல தினங்கள் பாடுபட வேண்டியிருந்தது.

ஆர். எம். ஸ்ரீனிவாஸன் (கண்டனூரில்)

சந்திரலேகா படத்தில் தண்ணீர் குடிக்கச் செல்லும் கட்டத்தில் ராஜகுமாரி மிகவும் ஆபாசமாக நடித்திருக்கிறாரே? அது கலாபிமானத்தினாலா? அல்லது காசாபிமானத்தினாலா?

அட, ராமா! நீர் ஏனய்யா இந்த 'மானத்தைப்' பற்றியெல்லாம் மண்டையை உடைத்துக் கொள்ளுகிறீர்?

ஜெ. ராமையா (கொழும்பு)

பி. ஏ. பெரியநாயகிக்கு விவாஹம் ஆகிவிட்டதா?

இல்லை; பெயரில்மட்டும் தானய்யா அவர் "நாயகி!"

கணேசன் (மாராவில், இலங்கை)

சோக நடிப்பில் யாருக்கு முதல் ஸ்தானம் அளிக்கலாம்? ராஜகுமாரிக்கா, ராஜம்மாவுக்கா?

ராஜம்மாவுக்குத்தான்.

ஆர். கே. மூர்த்தி (வேலூர்)

குப்பையில் கிடக்கும் மாணிக்கங்களாக மறைந்து கிடக்கும் புதிய முகங்களுக்குத் தாங்களாவது பத்திரிகையில் இடம் அளிக்க முடியுமா?

எங்கள் பத்திரிகையில் இடம் அளித்து என்ன பயன்? குப்பைகள் மூலம் மாணிக்கத்தைப் பெற்று வரும் பட முதலாளிகளல்லவா தம் படங்களில் இடமளிக்க வேண்டும்?

வி. ஆதி (கீழநத்தம்)

எம். வி. மணி பல படங்களில் நடித்திருக்கிறார்; ஆனால் பாடக்காணோமே? ஏன் ஒருவரும் இரவல் குரல் கொடுக்க முன்வரவில்லை?

"சதி அனுசூயா" படத்தில் அவர் பாடியிருக்கிறார். நல்லவேளையாய் ரஸிகர்களைத் துன்புறுத்துவதை அதோடு நிறுத்தி விட்டார்! அதன் பிறகு இரவல் குரலைப் பெற்று மீண்டும் ரஸிகர்களைப் பயமுறுத்த அவர் விரும்பவில்லை.

எஸ். வேலாயுதம் (காக்காப்பள்ளி, இலங்கை)

மேல் நாட்டுப் பட முதலாளிகளைப் போல் நம் பட முதலாளிகளும் ஏன் 'சீரியல்' என்னும் தொடர் படங்களைத் தயாரிப்பதில்லை?

நன்றாய்ச் சொன்னீரே! நம் பட முதலாளிகளெல்லாம் 'சீரியல்'களைத் தானே தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள்? மேனாட்டவர்களைப் போல இரண்டு மூன்று காட்சிகளில் அவைகளைக் காட்

டாமல் ஒரே காட்சியில் காட்டிவிடுகிறார்கள் நம் பட முதலாளிகள். இது தான் வித்தியாசம்!

ஜானகிராம் (ஸ்ரீ வைகுண்டம்)

வேதாள உலகத்தில் "பவளக் கொடி" நாடகத்தையும், வேறு சில நடனங்களையும் புகுத்தியிருக்கிறார்களே. இவை படத்திற்கு அவசியமில்லை யல்லவா?

படத்திற்கு அவசியமில்லை என்பது உண்மைதான். ஆனால் பணவசூலுக்கு அவசியம் என்று ஏவி. எம். மிற்குத் தோன்றியிருக்கும்.

கே. எம். இபுனு (புத்தளம், இலங்கை)

காமக் காட்சிகள் அதிகமாய் புகுத்தப்பட்டுள்ள படங்களை நம் பாலர்கள் பார்த்துப் பாழாகி வருகிறார்களே. அவர்களுக்கென அறிவை வளர்க்கும் படங்களைத் தனியாகத் தயாரித்துக் காட்டலா மல்லவா?

அறிவு வளர்ச்சிக்கான படங்களைத் தயாரிக்கும்படி நம் பட முதலாளிகளை வேண்டுவதற்குப் பதில், அறிவை உண்டு பண்ணும் படங்களைத் தயாரித்து நம் பட முதலாளிகளுக்குக் காட்டுவதே நலமாயிருக்கும்!

"ராஜமுக்தி"யில் முதன் முதலாகத் தோன்றி தம்மளவு நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொண்டு விட்டார் தெலுங்கு நடிகை பானுமதி.

"நம்ம 'மோகினி' கிடக்கிறாள். அந்தக் குதிரையை எப்படியும் வாங்கியே ஆகவேண்டும்." என்கிறார், புளிமூட்டை, நாட் அண்ணாஜியிடம்.

எ. ஸி. எம். நவாஸ் (கொழும்பு)

வேதாள உலகத்தில் டி. ஆர். மஹாலிங்கத்திடம் கொடுக்கப்படும் அணு குண்டை எந்த தேசத்து விஞ்ஞானி தயாரித்தார்?

இந்தக் கதையில் பொருத்த மற்ற முறையில் புகுத்தப் பட்டிருக்கும் இந்த அணுகுண்டு விசேஷ ஞான முடைய ஒரு விஞ்ஞானியின் கற்பனை என்று நினைக்கிறீர்கள்?

எம். ஐ. மெய்ல் (காஞ்சிபுரம்)

கே. எல். வி. வஸந்தா இப்பொழுது ஏதேனும் படத்தில் நடிக்கிறாரா? இல்லையென்றால், ஏன்? இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

இப்பொழுது அவர் "பூர்ண ஓய்வு" அனுபவித்து வருகிறார். முன்பெல்லாம் அவர் கலைக்கேற்றபடி வாழ்க்கையை நடத்தி வந்தார். இப்பொழுதோ அவர் தம் வாழ்க்கைக்கு ஏற்றபடி கலையை மாற்றிக் கொண்டு விட்டார். இது தான் காரணம்.

ஏ. குமார செட்டியார்
(பாலக்காடு)

ராஜயோகியில் பாகவதர் விட்டுப் போன பாகங்களை நடிப்பதற்கு கே. ஆர். ராமஸ்வாமி ஒப்பந்தம் செய்யப் பட்டாரே; அது என்னவாயிற்று?

பாகவதர் வெளி வந்ததும் அந்த பாகத்தை அவரே நடித்துக் கொள்ளட்டும் என்று விட்டுப் போய் விட்டார் ராமசாமி.

மிஸ். ஏ. எம். செல்லம் (கொழும்பு)

சந்திரலேகாவில் அந்தர ஊஞ்சலில் ஆடுவதற்கு ராஜகுமாரி ஏன் ஒப்புக் கொண்டார்?

கொஞ்சகால மறைவிற்குப் பிறகு குமாரி ருக்மணி இப்பொழுது மேடையில் நடனம் ஆடி வருகிறார்.

ஒப்புக் கொண்டாராவது? அவர் ஒப்புக் கொள்ளாததால் தானே வேறு ஒருவரை ஆடச் செய்திருக்கிறார்கள்.

டி. வி. ராமன் (மதுரூஸ்)

இளங்கோவனின் வசனம் எந்தப் படத்தில் நீன்கு சோபித்திருக்கிறது?

"கண்ணகி" தமிழ்ப் படத்தில்தான்.

மா. சண்முக சுந்தரம் (கொழும்பு)

நான் சினிமாவில் சேர்ந்து நடிக்க விரும்புகிறேன். ஆதலால் பட முதலாளிகளின் விலாஸங்களையெல்லாம் தெரிவிக்கவும்

ஏனய்யா, உம்முடைய ரூபாய் நோட்டுகளையெல்லாம் தபால் ஸ்டாம்பாக மாற்றி நஷ்டம் அடைய விரும்புகிறீர்?

கே. வேலு (தைப்பிங், மலேயா)

சர்க்காரின் தொழில் கல்விக் கழகத்தில் சேர்ந்தால் சினிமா நுணுக்கங்களையெல்லாம் கற்றுக்கொள்ள முடியுமா? அப்படிக் கற்றுக்கொண்டபின் சினிமாத் தொழிலில் உடனடியாய் வேலை கிடைக்குமா?

சினிமாவிலிருந்து வெகு காலமாய் விலகி யிருந்த கே. பி. கேசவன் "ஆதித்தன் கன"வில் மஹாலிங்கத்தின் தந்தையாக நடிக்கிறார்.

இக்கழகத்திற்கும் சினிமாத் தொழிலுக்கும் நெருங்கிய உறவு இல்லை. ஆதலால்தான் இக்கழகத்தில் தொழில் கற்றுக் கொண்டுள்ள சிலருக்கு சினிமாத் தொழில் வேலை அளித்துக் கௌரவிக்க வில்லை. இன்னொன்று; சினிமா ஒரு கலை. இக் கலையை படிப்பின் மூலம் மட்டும் கற்றுக் கொண்டுவிட முடியாது. அனுபவ ஞானம் அத்தியாவசியமாகும்.

எஸ். வெங்கட்டராவ்
(கும்பகோணம்)

கண்ணாம்பாவின் விலாஸத்தையும், அவர் தற்போது நடித்துக் கொண்டிருக்கும் படத்தையும் தெரிவிக்கவும்.

தம் சொந்தப் படமான "நவ ஜீவன"த்தில் நடித்துக் கொண்டிருக்கும் கண்ணாம்பா தற்போது "நெ 6, மலோனி ரோடு, தியாகராய நகர், சென்னை" என்ற விலாஸத்தில் வசித்து வருகிறார்.

எம். காயாம்பு ஆசாரி (கொழும்பு)

எம். வி. ராஜம்மா என்ன ஜாதியைச் சேர்ந்தவர். விவாஹம் ஆகிவிட்டதா அவருக்கு? தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்?

தற்போது "லைலா மஜ்னு" படத்தில் நடித்து வரும் (லிங்காயத் ஜாதியைச் சேர்ந்த) ராஜம்மாவுக்கு படங்களில் நடிப்பதற்கு எப்பொழுதோ முந்தியே விவாஹம் ஆகிவிட்டது. அதைப் பற்றி இப்பொழுதென்ன!

டி. ஈ. சாமையா
(கோலார் தங்கவயல்)

சேலம் ரத்னா ஸ்டுடியோவில் இப்பொழுது எத்தனை படங்கள் தயாராகின்றன?

"இன்பவல்லி" படம் ஒன்று தான் என்று நினைக்கிறேன்.

"குத்தூசி" (புத்தளம் இலங்கை)

எம். வி. ராஜம்மா, டி. ஆர் மஹாலிங்கத்தின் சொந்த மனைவி என்று சிலர் சொல்லுகிறார்களே! நிஜமாகவா?

மஹாலிங்கம் எந்தப் புது நடிகையுடன் கதா நாயகனாக நடித்தாலும் இந்த 'மனைவிப் பிரச்னை' அவரைத் தொடர்ந்து வரவே செய்கிறது!

ஆர். ஜெய தேவன்
(தம்பின், மலேயா)

மலேயாவில் தமிழ்ப் படம் பிடிப்பதற்கு "பாலா தியேட்டர்" ஏற்பாடுகள் செய்து வருவதுபற்றி உங்களுக்கு ஏதேனும் தெரியுமா?

தெரியாது. தெரிவித்தால் "குண்டூசி"யில் கூட வெளியிடுகிறேன்.

* * *

பாத்திரத்திற் கேற்ற நடிகர்களைத் தேர்ந்தெடுக்கிறார்களா? அல்லது நடிகர்களைப் பாத்திரத்திற கேற்றபடி மாற்றுகிறார்களா?

தமிழ்ப் பட உலகில் இரண்டுமில்லை. தம் நடிகர்களுக்கு ஏற்றபடி பாத்திரங்களை விட்டு விடுவதால் தான் நாம், "கோட்டானின் காதல்" "கரடியின் திருமணம்", "ஆந்தையின் அன்பு" என்று இது போல் பெயரிடப் படாத படங்களை பார்த்துத் தொலைக்க வேண்டியதாயிருக்கிறது!

புளிமூட்டையின் பக்கத்தில் அரிசி மூட்டைபோல் நிற்பவர் அங்கமுத்து. முபாரக் "பில்ஹணா"வில் இது ஒரு நெருக்கடியான கட்டம்.

டி. வி. குட்டப்பன்
(தேனும்பேட்டை)

சினிமாப் பார்ப்பவர்களெல்லாம் கெட்டேதான் போகிருர்கள். அப்படிக் கெடாமல் நல்ல வழிக்கு வந்தவர்கள் யாரேனும் இருந்தால் தெரிவியும்.

சரிதான், பெரிய போடு போட்டீரே! என்னைப் பற்றி அடியோடு மறந்து விட்டீர், பார்த்தீரா! கெட்டுப் போவதும், போகாததும் அவரவர் மனேதிடத்தைப் பொறுத்ததாகும். கெட்டுப் போகக் கூடியவர்கள் (சினிமா இல்லை விட்டால் கூட) கெட்டேதான் போவார்கள்.

• *

வேதாள உலகத்தில் டி. ஆர். மஹாலிங்கமும், யோக மங்களமும் மணந்துகொண்டது போல் வாழ்க்கையிலும் அப்படியே செய்யப் போவதாக வதந்தி உலவுகிறதே; இது உண்மையா?

அவர்களுக்குப் பதில் மற்றவர்கள்தான் இப்படியெல்லாம் நினைக்கிருர்கள் போலிருக்கிறது!

டி. சி. லக்ஷ்மணன் (மண்ணடி)

நான் ஹொன்னப்ப பாகவதர் வீட்டிற்குப் போனபோது அவருடைய நாய் என்னைப் பார்த்துக் குலைக்கவேயில்லையே!

"சரிதான்; உம்மை ஒரு திருடன் என்று அது கருதாதற்காக வருந்துகிறீர் போலும்!"

"ரஹி ரஹன்" (சிதம்பரம்)

மாதுரிதேவி எந்த ஜாதியைச் சேர்ந்தவர்? அவருக்கு வயதென்ன?

மாதுரி கிறிஸ்துவ ஜாதியைச் சேர்ந்தவர். சுமார் 25 வயதிருக்கும் அவருக்கு.

இ. ராஜாமணி (பம்பாய்)

தமிழில் டெக்னிகலர் படம் பிடிப்பதாகக் கேள்விப்பட்டேன். அதில் யார் யார் நடிக்கப் போகிருர்கள்?

தமிழில் ஒரு டெக்னிகலர் படத்தைப் பிடிக்க வேண்டுமென பக்ஷிராஜா பில்ம்ஸார் திட்டம் போட்டுள்ளது உண்மை. ஆனால் அது என்ன படம், யார் யார் நடிக்கப் போகிருர்கள் என்பதெல்லாம் இன்னும் தீர்மானம் ஆகவில்லை.

நாட்டியவானில் விரைவில் பிரகாசிக்க முயன்று வருகிருர் குமாரி ஆர். தங்கமணி

கே. பி. ராமசாமி
(சிகாமட்)

பி. யு. சின்னப்பா மைசூர் சமஸ்தானத்தில நிலம் வாங்கக் கூடாது என்று தடை விதிக்கப் பட்டிருக்கிறதாமே? உண்மையா?

புதுக்கோட்டை சமஸ்தானத்தில் அவர் நிலம் வாங்கக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருப்பதாகத்தான் நான் கேள்விப் படுகிறேன்.

34, 35-வது பக்கத்திலுள்ள செய்திப் படங்கள்

(1) சுவடி என்ன சொல்கிறது என்று பார்க்கிருர் நாகய்யா (சக்ரதாரி)

(2) கிளி என்ன கூறுகிறது என்று கேட்கிருர் அஞ்சலிதேவி (ஆதித்தன் கனவு)

(3) போலிச் சாமியார் ஏதோ அட்டகாசம் செய்கிருர் (கிருஷ்ண பக்தி)

(4) அவர் ஊசல் ஆடுவது போலவே அஞ்சலியின மனதும் ஊசலாடுகிறது! (ஆதித்தன் கனவு)

நல்ல தம்பி ஒரு நூதனக் கதை. அதில் ரஸிகர்களுக்கு களிப்பூட்டுவ தற்காக கிருஷ்ணனும், மதுரமும் இதுபோல் நூதனமாக ஆடுகின்றனர்.

இந்த ஆண் சிங்கம் வேட்டையாடப்
போவது ஒரு பெண் மான்தானே?
தேவமனோஹரியில் ஹொன்னப்பா.

ஞன அமராவதியில் தாஸியாக நடித்
துப் புகழ்பெற்ற எம். எஸ். வடிவாம்
பாள் மீண்டும் திரைக்கு வருகிஞர்.







தேவமனோஹரியில் சாடிக்குர்!
பதில் தலைப்பாகையுடன் காட்சி
அளிக்கிறார் சுவாமிநாதன்.

ஆதித்தன் கனவி'ல் துடுக்காகப் பேசி, மிடுக்காக நடித்து மக்கள் மனதைக் கவருகிருள் சிறுமி சிந்தாமணி.

நல்ல தம்பி மூலம் பானுமதி சினிமா
ரஸிகர்களை ஒரேபடியாய் வசிகரித்து
விடுவார் போலிருக்கிறது

நுனிப்புல்

வெட்டுக்கிளி

சங்கீதம், சினிமாவின் சகோதரக் கலையாகும். அதனால்தானோ என்னவோ இவை இரண்டிற்குமிடையே ஒற்றுமை இல்லை. சங்கீதத் துறைக்கும், சினிமாத் துறைக்கும் தொலை தூரம் இருந்தே வருகிறது.

* * *

சங்கீதத் துறையில் பிரமாதமான பெயரும் புகழும் பெற்ற ஒரு வித்வானோ அல்லது வித்வாம்ஸினியோ ஆகட்டும், சினிமாத் துறையில் காலடி வைத்ததும் அவர்களுக்குக் கிடைப்பது நேர்மாறான வரவேற்புதான். ''ஏண்டாப்பா இந்தத் துறைக்கு வந்தோம்'' என்று அவர்கள் நினைக்கும்படி ஆகிவிடுகிறது.

* * *

சங்கீத கலாநிதி மகாராஜபுரம் விஸ்வநாத அய்யர் சங்கீதத் துறையில் அடைந்துள்ள கீர்த்தி மகத்தானது. தம் தம்பிக்குக் கிடைத்த ஆதரவை மனதில் கொண்டோ என்னவோ, அந்த நாளில் அவர் அஸன்தாஸ் நந்தனார் படத்தில் வேதியராக நடித்தார். ஆனால் புத்திசாலித்தனமாக அத்துடன் சினிமாத் துறையை அவர் மறந்து விட்டது பாராட்டத்தக்கது.

* * *

அதே போலத்தான் முசிரி சுப்ரமண்ய அய்யரும் துக்காராம் வேஷத்தில் திரையில் தோன்றினார். அவருடைய பாட்டுகளெல்லாம் கர்ணாமிருதமாய்த்தான் இருந்தன. ஆனால் படத்தைப் பார்த்த நமக்கெல்லாம் அவர் நடிக்க நேர்ந்ததைக் குறித்து துக்கமாகவே இருந்தது!

* * *

ஜி. என். பி. யின் நெருங்கிய நண்பர் ஒருவர் அவரிடம், ''என்ன ஸார், படங்களில் நடிப்பதில் நீங்கள் வெற்றி பெறுவதே இல்லையே. அப்படியிருக்க மீண்டும், மீண்டும் ஏன் படங்களில் நடிக்க சம்மதிக்கிறீர்கள்?'' என்று கேட்டாராம். நமக்கும் அதே கேள்வியைத்தான் கேட்கத் தோன்றுகிறது.

அவர் முதன் முதலில் நடித்த பாமா விஜயம் படத்திலிருந்து (தற்போதைக்கு!) கடைசியாக நடித்த ருக்மாங்கதன் உள்பட எந்தப் படத்திலாவது அவர் வெற்றி பெற்றதாகக் கூற முடியுமா?

* * *

ஸ்ரீ. வி. வி. சடகோபன் சினிமாத் துறையில் பிரவேசித்த சமயம் சங்கீதத்தில் அவருக்கு நல்ல ஞானம் இருந்தது வாஸ்தவந்தான். என்றாலும் அவர் சங்கீத வித்வானானது பிற்காலத்தில்தான். அவர் நவயுவன் படத்தில் நடிக்க ஆரம்பித்ததிலிருந்து மதன காமராஜன் படம் வரை எதிலுமே பிரமாதமாய் நடித்து வெற்றி அடையவில்லை. ஒரு விஷயத்தில் எனக்கு அவ

ரிடம் பரம திருப்தி. மதன காமரா ஜன் படத்திற்குப் பிறகு படங்களில் நடிக்கும்படி அவருக்கு எவ்வளவோ அழைப்புகள் வந்தும் அவைகளை யெல்லாம் அவர் நிராகரித்து விட்டார். அதற்குப் பதில் அவர் சங்கீதத் துறை யில் வட்டியும் முதலுமாக முன்னேறி வருகிறார்.

* * *

நாடக மேடையில் (சங்கீதத்தினால் தான்!) பிரசித்தி பெற்று விளங் கிய எஸ். வி. சுப்பையா பாகவதர் சுபத்ரா படத்தின் மூலம் சினிமா உலகில் பிரவேசித்தார். ஆனால் கம்பர் அவரை வெளியேற்றி விட்டது.

அநேக படங்களில் நடனம் ஆடிவரும் லலிதா, பத்மினி "ஆதித்தன் கனவி" லும் ஆடுகின்றனர்.

* * *

'களக்காடு' என்ற தம் ஊரின் பெயரால் பிரசித்தமாகி யிருக்கும் சங்கீத வித்வான் ராம நாராயண அய்யர் ராமதாஸாக நடித்ததைப் பார்த்த ரஸிகர்கள், "ஐயோ பாவம்! இவர் ஏன் இந்தத் துறையில் வந்து மாட்டிக் கொண்டார்." என்று அவர் மீது அனுதாபப் பட்டார்கள்.

* * *

ரேடியோக் கச்சேரிகள் மூலமும், மேடைக் கச்சேரிகள் மூலமும் பிர பலம் அடைந்திருந்த மோகனம்பாள் கருட கர்வ பங்கம் என்ற படத்தில் முதன் முதலாய் நடித்தார். அடுத்த படியாக சேதுபந்தனத்தின் மூலம் இத் தொழிலிலிருந்து கரையேற்றி விடப்பட்டார். அதன் பிறகு, பாவம், அவருக்கு கச்சேரி கிராக்கிகூட இல் லாமல் போய் விட்டது!

* * *

தாஸி அபரஞ்சி மூலம் திரைக்கு வந்தவர் என். ஏ. சுந்தரம். அது நல்லபடமாக இருந்தும் அவரது பாகம் மட்டும் படுதோல்வியா யிருந்தது. அதுமட்டுமல்ல; பாடுவதில் பெயர் பெற்று வந்த அவருக்கு பாடுவதற்கு ஒரு பாட்டுக்கூட கொடுக்கப்பட வில்லை!

* * *

பிரபல நாதஸ்வர வித்வானை திரு வாடுதுரை ராஜரத்தினம், நாதஸ்வ ரம் வாசித்தால் நாளெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கலாம். அப்படியிருக்க அவர் காளமேகமாகத் திரையில் தோன்றிய போது ஆதரவு அளிக்காது அவரை ஏமாற்றி விட் டார்கள்—இந்தப் பொல்லாத ரஸிகர் கள்!

அதே மாதிரிதான் பிடில் வித்வான் சௌடையாவின் சினிமாப் பிரவேசப் படலமும் முடிந்தது. அவர் (தயாரித்து) நடித்த **வாணி** என்ற கன்னடப் படம் எங்கு, எப்பொழுது திரையிடப்பட்டது என்பதே அநேகருக்குத் தெரியாது. வாணி என்ற ஒரு படம் திரையிடப்பட்ட விஷயமே சிலருக்குத்தான் தெரிந்திருக்கும்! அவ்வளவு பிரபலம்—சௌடையாவுக்கு சினிமாத் துறையில்!

* * *

வாணி என்றதும் அதில் நடித்தாரே வெண்கலத்வனி செம்பை வைத்தியநாத பாகவதர் அவரை மறந்து விடப் போகிறீர்கள். ஆனால் அந்த ஒரு படத்தில் அவர் நடித்த விஷயம் அநேகருக்குத் தெரியாமல் ரகஸியமாயிருப்பதே நலம்!

* * *

கிராமபோன் மூலமும், கச்சேரிகளிலும் "ஜகதோத்தாரண"வைப் பாடி ஜெகமெங்கும் புகழ் பெற்றார் மைசூர் வித்வான் பி. எஸ். ராஜா ஐயங்கார். ஆனால் அது வேறு உலகம்; சினிமா வேறு உலகமல்லவா? சினிமா உலகில் அவரும்தான் சில படங்களில் நடித்திருக்கிறார். ஆனால், அந்த ஜகதோத்தாரணனின் கிருபை இவ்வளவு நேர் மாறாகவா முடிய வேண்டும்!

* * *

"எந்த விதியானாலும் அதற்கும் ஒரு விலக்கு உண்டு"—இது ஒரு ஆங்கிலப் பழமொழி. அதற்கிணங்க, மேற் குறிப்பிட்ட நடைமுறைக்கும் விலக்கானவர்கள் சிலர் இருப்பதைத்தான் குறிப்பிடுகிறேன்.

* * *

உதாரணமாக, எம். எஸ். சுப்புலக்ஷ்மியை எடுத்துக் கொள்ளுங்கள். மேற்படி நடைமுறைக்கு அவர்

முற்றிலும் விலக்கானவர். சங்கீதம் சினிமா ஆகிய இரு துறைகளிலும் ஒருங்கே அவர் இணையற்ற வெற்றியைப் பெற்றிருக்கிறார்.

* * *

எம். எஸ். எஸ். சேவாசதனத்தில் நடிக்கத் தொடங்கியதிலிருந்து (ஹிந்தி) மீரா உள்பட எந்தப் படத்திலும் அவரது பாகம் சோடை என்று சொல்ல முடியாது.

* * *

எம். எஸ். சுப்புலக்ஷ்மியைப் பற்றி எழுதும் போது அவர் நடித்த படம் சம்பந்தப்பட்ட ஒரு ரஸமான விஷயம் ஞாபகத்துக்கு வருகிறது.

அவர் நடித்த ஒரு படத்திற்கு பாபநாசம் சிவன் பாட்டுகளை எழுத ஏற்பாடு செய்யப் பட்டார். படம் முடிவடைந்து திரையிடப் பெற்றது. "பாட்டுகளை எழுதியவர் சிவன்" என்றுதான் அறிவிக்கப் பட்டிருந்தது. ஆனால் படத்தைப் பார்த்த "சிவன்" துள்ளிக் குதித்தார். காரணம் அந்தப் படத்தில் அவருடைய பாட்டுகள் இரண்டே இரண்டுதான் இடம் பெற்றிருந்தன. மற்றவை யெல்லாம் யாராலோ எழுதப் பட்டவையாம். ஆனால் பெயர் என்னவோ (எல்லாப் பாட்டுகளுக்கும் சேர்த்து) பாபநாசம் சிவனுக்குத்தான்!

* * *

இப்படி ஒருவருக்கு அவர் எழுதாத பாட்டுகளுக்காக பெயர் கிடைத்தது ஒரு புறமிருக்க, ஒருவர் சிரமப்பட்டு எழுதிய பாட்டுகளுக்கோ, கதைகளுக்கோ, வசனங்களுக்கோ அவருக்குப் பெயர் கிடைக்காமற் போன சம்பவங்கள் அநேகம் உண்டு. ஆனால் சமீப விஷயம் ஒன்றை மட்டும் இங்கு குறிப்பிடுகிறேன்.

* * *

பம்பாயில் தயாராகி முடிவடைந்துள்ளது குண சுந்தரி என்ற தமிழ்ப் படம். இந்தப் படத்திற்கான கதை, வசனங்களை எழுதி, அதில் ஒரு நல்ல பாகத்தில் நடித்துமிருக்கிறார் வி. சீதாராம் என்பவர். அத்துடன் கூட அப்படத்திற்கான, "தீபம் சுடர் விட்டு", "காலமெல்லாம்"—என்ற இரண்டு பாட்டுகளையும் அமைத்துக் கொடுத்திருக்கிறாராம் அவர்.

இந்த இரண்டு பாட்டுகளையும் தாம் அமைத்ததாக தனியாய் குறிப்பிடும்படி அவர் படத்தின் டைரெக்டரிடம் கேட்டாராம். ஆனால் அவர் எவ்வளவோ மன்றாடியும் பயனில்லையாம். டைரெக்டர் ஒரே பிடிவாதமாக, மொத்தத்தில், "பாட்டுகள் எழுதியவர்" என்று (படத்திற்கான மற்ற பாட்டுகள் எழுதியவரின் பெயரை மட்டுமே) குறிப்பிட்டிருக்கிறாராம். எப்படி யிருக்கிறது இந்த நியாயம்?

* * *

ராயல் டாக்கீஸின் சுதர்சன், சியாமளா பிக்சர்ஸின் இன்பவல்லி ஆகிய இரு படங்களின் விளம்பரங்களிலும் "கதை, வசனம் 'இளங்கோவன்'" என்று அறிவிக்கப் பட்டுள்ளது. ஆனால் உண்மையில் மேற்படி படங்களுக்கு அந்தக் கைங்கரியங்களில் ஈடுபட்டிருப்பவர்கள் முறையே, "வேலவன்", எம். லக்ஷ்மணன் ஆகியவர்கள் என்று தெரிகிறது.

* * *

இன்று தமிழ் நாட்டில் பிரபலமாக விளங்கும் ஒரு டைரெக்டர் தாம் டைரெக்ட் செய்யும் படங்களின் கதை, வசனங்களைத் தாமே எழுதியதாகப் போட்டுக் கொள்கிறார். ஆனால் உண்மை அப்படியல்ல. அவருடைய உதவியாளர்களில் யாராவது ஒருவர் சிரமப் பட்டுச் செய்யும் வேலைக்கு அவருக்குக் கிடைத்து வருகிறது கௌரவம். இதற்குத்தான் 'உழைப்பு ஓரிடம்; புகழ் மற்றோர் இடம்' என்பது.

கவனிப்பார்களா !

தமிழ் நாட்டிலே படித்தவர்களின் எண்ணிக்கை பட முதலாளிகளுக்குத் தெரியாத தில்லை. கண்டவுடனே எழுத்துக் கூட்டாமல் படிப்பவர்கள் நூற்றுக்குப் பத்து பேர்கள் கூட இருக்க மாட்டார்கள் என்பது உண்மை. இவ்வாறிருக்கக், கதை தொடங்குவதற்கு முன் அவர்கள் காட்டும், நடிகர், நடிகைளின் பெயர்கள் பத்து விநாடிகள் தான் காட்டப்படுகின்றன. எவ்வளவு விரைவில் படித்தாலும், முழுதும் படிக்கமுடிவதில்லை. அதோடு மட்டும் அல்லாமல் படிக்கும் விரைவில் ஞாபகம் வைத்துக் கொள்ளவும் முடியவில்லை. இதனால் பழக்கமில்லாதவர்கள் ஒரு நடிகரை இன்னொரு நடிகராக எண்ணிவிடக் கூடுகிறது இதனால் ஏற்படும் வாதங்களிலே பெரியதோர் சண்டையும் ஏற்படுகிறது. புத்தகம் வாங்கிப் பார்க்கலாம் என்றால் சில சமயம் அது கிடைப்பதும் இல்லை. விலையும் அதிகமாக இருக்கிறது. இதை நம் பட முதலாளிகள் உணர்ந்து பெயர்களை கொஞ்சம் அதிக நேரம் காண்பிப்பார்களென நம்புகிறேன்.

—ரு. இராமாநுஜன்,

மயிலம்.

பொதுமக்களின் கடமை

சினிமா பார்க்கும் வழக்கம் மக்களிடையே இன்று தினசரிப் பழக்கங்களில் ஒன்றாகி விட்டது. ஆண்டி முதல் அரசன் வரை என்றது போல் பிச்சைக்காரன் முதல் பெரு முதாலாளி வரை படம் பார்க்கத் தவறுவதே யில்லை.

"சினிமா என்பது ஒரு அற்புதமான கலை. அது காட்டப்படும் இடம் "ஓர் அழகிய கலைக் கூடம்" என்பதை மக்கள் உணர வேண்டும். 'அசுத்தம் செய்யாதீர்கள்' என்று பெரிய எழுத்தில் எழுதி யிருப்பர், ஆனால் ஜனங்கள் அதற்கு மாறாகத்தான் நடந்துகொள்ளுகிறார்கள். வெற்றிலையைப் போட்டு மென்று உமிழ்ந்து தரையை ரத்தக் காடாக மாற்றி விடுகின்றனர். தனியான தொட்டிகளில் உமிழ்வதே இடையாது. உட்காரும் பெஞ்சுகள் என்பதை மறந்து வெளியில் நடமாடிய காலாலேயே மிதித்துக் கொண்டு அவை மீது நடப்பது தவறு. பிறருக்கு இடங் கொடாதபடி பெஞ்சு மீது படுத்துக் கொள்வது அதைவிடத் தவறு.

வரிசையாக நின்று டிக்கெட் வாங்க வேண்டும் என்ற நிபந்தனையை அறிந்தும், காலிகள் இங்கேயும் புகுந்து விட்டார்களோ என்று அஞ்சும்படி நடந்து கொள்கின்றனர் ஜனங்கள்.

கலைக் கூடமாக திகழும் சினிமாக் கொட்டகைகளில் நடக்கும் திருவிளையாடல்களே இவை. இந்த 'துர்ப் பழக்கங்கள் அறவே நீங்க வேண்டும். இதைவிட்டு கொட்டகை சொந்தக்காரர்களே நம் மீது குறை கூறும் வண்ணம் நடந்து கொள்ளுவது பெருந்த அவமானமாகும்.

— அட்சயன்,

மதுரை.

வெளி அழகு, உள் மோசம் !

எங்கள் ஊரான ராணிப் பேட்டையில் சென்டிரல் டாக்கீஸ் என்று ஒரே ஒரு தியேட்டர் தான் இருக்கிறது. இதில் வரும் படங்களில் முக்கால் வாசிக்கு மேல் ஆங்கிலமும் ஹிந்தியுமாகத்தான் இருக்கும். அதுவும் மதராஸில் இன்று திரையிடப் படும் படங்களாகவும் இருக்கும் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். எங்கள் ஊர் தியேட்டரின் மகிமையை.

இப்படி ஒரே யடியாகப் பெருமை கொள்ளும் வகையில் அமைந்துள்ள தியேட்டரில் குறைகளும் அதே அளவில் தான் இருக்கின்றன. யாராவது வெளியூர் ஆசாமிகள் தியேட்டரில் வரும் படங்

களையோ, தியேட்டரின் முன் தோற்றத்தையோ கண்டு மயங்கி படத்தைப் பார்க்க உள்ளே போனுல்தான் விஷயம் விளங்கும். "ஆளைப் பார்த்து மயங்காதே ஊது காமாலை" என்பதை உடனேஉணர்ந்து கொண்டு விடலாம்.

இந்தத் தியேட்டர் பல வருஷங்களாக நாடகக் கொட்டகையாக இருந்து வந்தது. பிறகு இதைச் சினிமாவாக மாற்றிஞர்கள். அச்சமயம் வாங்கிய ஒரு புரொஜெக்டர்தான் இன்றும் இருக்கிறது. ஆரம்ப காலத்தில் அதன் சக்தி மகத்தானதாக இருந்தாலும், காலம் மாறுவது போல் அதன் தன்மையும் மாறி விட்டது. இப்பொழுது அதன் மூலம் திரையில் விழும் படம் வெறும் நிழல்களாகவே காணப்படுகின்றது. பேச்சு, பாட்டு எல்லாம் வெறும் கூப்பாடாகவே இருக்கின்றன.

இது தான் இப்படி யென்ருல் தியேட்டரின் உள் பக்கக் கதவுகள் (சாக்ஷாத் ஜெயிலைப் போல) இரும்புக் கம்பிகளால் ஆனவை. வகுப்புகளைப் பிரித்துக் காட்ட தியேட்டர் நிர்வாகிகள் ஆட்டுப் பட்டியை மனதில் கொண்டு சவுக்குக் கட்டைகளைவேலிபோல் கட்டியிருக்கிருர்கள். இவ்வளவு அழகான தியேட்டரை கண்ட பிறகு எவருக்குத் தான் இதன் மீது பொருமை ஏற்படாது! அத்துடன் இத்தியேட்டருக்குப் புதுப் படங்களைக் கொடுத்து ரஸிகர்களின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்ளும் பட முதலாளிகளைக் கண்டுதான் யார் பொருமைப்பட மாட்டார்கள்!

—ராஜம்,

வாலாஜாபேட்டை*

*பரிசு பெற்ற கடிதம்

★

எழுதியவர் :

ஆர். ராமாநுஜம்,
பி. எஸ். டி. காலேஜ்,
மயிலம்,
திண்டிவனம் மார்க்கம்

தாஜ் தியேட்டர்

வேலூரிலிருக்கும் 'தாஜ்'தியேட்டர் இவ்வூரின் மற்ற தியேட்டர்களை விட சிறந்த முறையில் நிர்வகிக்கப் படுகிறது என்பது தான் சாதாரணப் பேச்சு. ஆனுல் இங்கு அக்கிரமங்களும் சிறந்த முறையில்தான் நடந்து வருகின்றன! ஏதாவது புதுப் படம் வந்து விட்டால் கூட்டம் அதிகமாகி விடும். ஆனுல் டிக்கெட் கொடுக்கும் முறையோ மோசமான நிலையிலிருக்கிறது. குறைந்த வகுப்பு டிக்கெட்டுக்களுக்குத் தான் இந்த வைபவம் என்ருல் உயர்ந்த வகுப்புக்களுக்கும் இதே கதிதான். டிக்கெட் வினியோகத்திற்கு 'கியூ' வரிசைக் கையாளப்பட்டு வெற்றிகரமான வாபஸ் பெறும்! இதில் போலீஸ்காரர்களுக்கும் பங்கு உண்டு போலும்! ஆனுல் அதிகப் பங்கு தியேட்டர் நிர்வாகிகளுக்குத் தான். 'கியூ' வரிசையில் நிற்பவர்களுக்கு ஒரு டிக்கெட் கொடுத்தால் பின் புறமாக 5 டிக்கெட்களை கொடுப்பார்கள். முதல் காட்சி 5-30-க்கு ஆரம்பம் என்ருல் 5 மணிக்குத் தான் டிக்கெட் கொடுக்க ஆரம்பிப்பார்கள். முதல் வகுப்பு டிக்கெட்டும் இரண்டாம் வகுப்பு டிக்கெட்டும் 10, 15 பேர்களுக்குக் கொடுத்து விட்டு மூடிவிடுவார்கள். தியேட்டர் மானேஜர், சிப்பந்திகள், முதலியவர்களுக்கு வேண்டியவர்களுக்கே டிக்கெட் கொடுக்கிருர்கள். ஏதோ கொடுத்தோம் என்று காண்பிக்கவே இம்மாதிரி செய்கிருர்கள். இது தான் பொது ஜன நன்மைக்காக நடத்தப்படும் தியேட்டரா? இல்லையென்ருல் பொது ஜனங்களுக்குத் தொந்திரவு கொடுக்காத முறையில் தியேட்டர் நிர்வாகிகள் படங்களைத் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு மட்டும் காண்பித்துக் கொள்ளட்டுமே! அப்பொழுது அவர்களை யாரும் போய் டிக்கெட் கேட்கவும் மாட்டார்கள். அவர்களுக்கும் வீண் விளம்பரம் செய்து ஊரைக் கூட்ட வேண்டிய சிரமம் ஏற்படாது.

—டி. என். ரங்கராஜ்.

ஆலந்தூர்.

ஓரேயொரு அசௌகரியம்

எங்கள் ஊர் தியேட்டர்களுள் பெரியதும் அழகானதும், எல்லா சௌகரியங்களும் உடையதும் ராஜா தியேட்டர். இந்த தியேட்டரில் எல்லா சௌகரியங்களும் இருந்தும்டிக்கெட்வாங்குவதற்கு மாத்திரம் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆட்டம் ஆரம்பிக்க மூன்று மணி நேரத்திற்கு முன் கூட்டியே ஜனங்கள் அழகாக க்யூ வரிசையில் நிற்கிருர்கள். ஆனுல் டிக்கெட் கொடுக்க ஆரம்பித்த உடனே க்யூ வரிசை கலைந்துவிடுகிறது! குண்டர்கள் ஜனங்களைத் தள்ளிக்

கொண்டும், ஜன்னலின் மேல் நின்று கொண்டும், ஜனங்களின் தலையின் மேல் நின்று கொண்டும் டிக்கெட் வாங்கி அவைகளை அதிக விலைக்கு விற்கிறார்கள். இதைக் கவனிப்பாரே கிடையாது. இந்தத் தியேட்டரில் உயர்ந்த வகுப்பு டிக்கெட் வாங்குவதற்கு தனி வசதி கிடையாது. மற்ற சௌகரியங்கள் செய்திருப்பதுபோல் டிக்கெட் கொடுப்பதற்கும் சரியான முறையைக் கையாண்டால் நலமாக இருக்கும்.

—ஒய். சீதாராமன்,

திருச்சி.

அறிவுப் படங்கள் தேவை !

இந்தியா சுதந்திர நாடாகி விட்டது. இனி இந்நாட்டின் மக்களாகப் போகும் சிறுவர்களும் சிறுமிகளும் சிறந்த அறிவாளிகளாக விளங்க வேண்டியது அவசியம். சிறுவர்களின் அறிவைப் பெருக்க, இப்போது பிரபலம் அடைந்துள்ள சினிமாக் கலையை ஒரு கருவியாகக் கையாளலாம்.

சிறுவர்களுக்கேற்ற துணுக்குப் படங்களைத் தயாரித்து அவர்களின் அறிவைப் பெருக்கலாம். உதாரணமாக, சுத்தமாக இருத்தல், தேகப் பயிற்சி செய்கல் முதலிய சுகாதார விதிகளையும், சுரங்கத் தொழிற்சாலைகள், பருத்தி, இரும்பு ஆலைகள், ஆபத்துக் காலத்தில் முதல் சிகிச்சை செய்தல் முதலிய படங்களைந் யாரிக்கலாம். சரித்திர சம்பவங்களைப்படமாக்கலாம். இவைகள் சிறுவர்களுக்குப் பெரிதும் உதவும். மேலும், சமையல் வேலை, தையல் வேலை, குழந்தை வளர்த்தல் முதலிய கருத்துக்களைக் கொண்ட படங்கள் பெண்களுக்கு உதவும்.

இத்தகைய சிறு படங்களை பெரிய படங்களுடன் சேர்த்துக் காட்டலாம். அப்படிச் செய்வதால் பட முதலாளிகளுக்கு சமூக சேவை செய்த பலனுடன், புகழும் ஏற்படும். இப்பொழுது சர்க்கார் கூட ஏதோ இதற்கான சட்டம் கொண்டு வரப் போவதாகக் கூறுகின்றனர். சர்க்கார் சட்டம் வருவதற்கு முன்னதாகவே நம் பட முதலாளிகள் இந்த நல்ல காரியத்தில் மனதைச் செலுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

[குறிப்பு : இக்கடிதம் எழுதியவர் தம்பெயர், விலாஸம் தெரிவிக்கவில்லை. உடனே அவர் தம் விலாஸத்தைத் தெரிவிக்கக் கோருகிறோம்—ஆசிரியர்.]

வழி செய்யுமா ?

சினிமா உலகம் புதிய நடிக நடிகைகளை எதிர் நோக்குகின்றது. இன்னும் சரியாகச் சொல்வதென்றால் சமூக கலாசார படங்களுக்கு ஏற்ற நடிகர்கள் தேவை. புது கிரஹங்களைக் கூட விரைவில் கண்டு பிடித்து விடலாம் போலிருக்கிறது. ஒவ்வொரு டைரெக்டரும் புது முகங்களைக் கண்டு பிடிப்பதைப் பார்த்தால். ஆனால் இதற்கு முற்றிலும் நேர்மாறாக உள்ளது தற்போதைய நிலை. அது என்னவென்றால், அநேகர் நடிகர்களாக மிகவும் விரும்புகின்றார்கள். ஆனால் அவர்களெல்லோரும் ஒரு குறையை உடையவர்களாகவே இருக்கின்றனர். குறை என்னவென்றால், நன்றாக பாடுபவருக்கு அழகும், கம்பீரமும் இல்லாமையும், இவைகளை உடையவர்களுக்கு இனிய குரல் இல்லாதது மாகும். பேசுவதற்குக் கூட இரவல் குரல் கொடுக்கும் இக்காலத்தில் அக்குறைகள் இருந்தால் தானென்ன ?

எங்களூரிலேயே எடுத்துக் கொண்டால் சினிமாவில் சேரக் கூடியவர்கள் நிறைய இருக்கின்றனர். இவர்கள் எப்படி சினிமாவில் சேருவது என்று தவிக்கிறார்கள். சில சினிமா சம்பந்த

சில தினங்களுக்கு முன் அரங்கேறிய டி. கே. மீனாக்ஷி சுந்தரி

மான பத்திரிகைகள் ஆர்வமுள்ள நடிக நடிகையர்களை அறிமுகப் படுத்துகின்றன. (கொஞ்சம் பணம் பெற்றுக் கொண்டு!) அவைகள் யாருக்கு அறிமுகப் படுத்தின? அவர்கள் தம் பத்திரிகைகளில் ஆர்வமுள்ளோரின் படத்தை அச்சிட்டு, அதோடு அவர்களைப் பற்றிய சில வர்ணனைகளையும் புனைந்து எழுதி விடுகிருர்கள். அறிமுகப்படுத்தப் பட்ட வரை வாசகர்களே அறிகின்ருர்கள். அதனுல் ஆகப்போவதென்ன? அறிமுகப் படுத்தப் பட்டவர் சில ரூபாய்களை இழந்தது தான் கண்ட பலன். ஆனுல் அவர்கள் தங்களுடைய 'போட்டோ' வெளியாகி யிருப்பதைக் கண்டு சிறிது நிம்மதி யடையலாம்.

ஆகவே, சினிமாவில் சேருவதற்கு ஆர்வம் மிகுந்தவர்களை அழைத்துக் கொள்ள சினிமா உலகம் வழிசெய்யுமா?

—எஸ். எஸ். ராமமூர்த்தி

பறங்கிப்பேட்டை.

ஓர வஞ்சகம்

சென்னை சர்க்கார் மது விலக்குத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு முன்னதாகவே 'படங்களில் மது பானம் அருந்தல், மற்றும் சம்பந்தப் பட்ட காட்சிகள் இருக்கக் கூடாது' என்று எச்சரிக்கை செய்திருந்தனர். சர்க்காரின் எச்சரிக்கைக் கிணங்க, தமிழ்ப் படங்களில் அத்தகைய நிகழ்ச்சிகள் சேர்க்கப் படாமலிருக்கின்றன, இப்பொழுதோ பூர்ண மதுவிலக்கு நம் மாகாணம் முழுதும் அமுலுக்கு வந்துவிட்டது. இனிமேல் தமிழ்ப் படங்களில் மதுவைப் பற்றிப் பேசக் கூட மாட்டார்கள். ஆனுல் பிற பாஷைப் படங்கள் சிலவற்றில் இன்னமும் மது அருந்துவது, அதைப் பற்றிப் பேசுவது போன்ற காட்சிகள் இருக்கத் தான் செய்கின்றன.

உதாரணமாக, சமீபத்தில் வெளி வந்த ஒரு ஹிந்திப் படத்தைப் பற்றிக் கூறுகிறேன், படத்தின் பெயர் "சந்நியாசி" அதில் ஒரு கட்டத்தில் கதாநாயகனுக்கு ஒருவன் மதுவைக் கொடுக்கிருன். அதை அவன் சாப்பிடுகிருன். அதோடு கதாநாயகன் நின்று விடவில்லை. தான் மது அருந்தியது பற்றிப் பேசவும் தலைப்பட்டு விடுகிருன். தமிழ்ப் படங்களில் மது அருந்துவதைச் சேர்க்கக் கூடாது என்ற சர்க்கார் இப்படி ஒரு படத்தில் இருப்பதை ஏன் கவனிக்கவில்லை? தணிக்கை போர்டார் ஏன் இதை அனுமதித்தார்கள்?

எல்லாம் ஒரே விந்தையாக இருக்கிறது. சர்க்காரின் சட்டங்களும், தணிக்கை போர்டாரின் ஓர வஞ்சகமும் திகைக்க வைக்கிறது. பொது ஜனங்களுக்கு நன்மை செய்வதற்காக உள்ள சர்க்காரும் தணிக்கை போர்டாரும் ஏன் இப்படிச் செய்கிருர்கள்? அல்லது பட முதலாளிகள்தான் அவர்களை ஏமாற்றுகிருர்களா?

—மணி.

சென்னை.

தமிழ் சினிமாவின் தலைவிதி

எக்கலையும் நாட்கள் ஆக ஆக மேன்மை திக்கை நோக்கிச் செல்லுமே அல்லாமல், தாழ்மை திக்கை நோக்கிச் செல்லாது. இதற்கு நேர் மாருக இருக்கிறது நம் தமிழ் சினிமாக் கலையின் போக்கு. முன்பு பிடித்த படங்களில் உள்ளது போல் இப்பொழுது பிடிக்கும் படங்களில் ரஸமான கட்டங்களைக் காண்பது மிக அரிதா யிருக்கின்றது. இதற்கு பட முதலாளிகளின் அசிரத்தையே காரணமாகும். அவர்கள் இச் சினிமாக் கலையை ஒரு வியாபாரத் துறையாகக்கருதிக்கொண்டு வருகிருர்கள். மனச் சலிப்படைந்த மக்களை இன்ப மூட்டுவதற்கு ஏற்பட்ட கருவி சினிமாக் கலை என்பதை அவர்கள் இன்னும் அறியாதது ஓர் வருந்தத்தக்க விஷயம். மேலும் அவர்கள் இன்னும் எந்தப்புராணத்தில் எந்த இடம் பிடிக்கப் படாமலிருக்கிறதோ அதை எடுத்துக் கூட்டியோ கழித்தோ ஒரு பட உருவமாகச் செய்து வருகிருர்கள். அப்படிப் பிரயாசைப் பட்டு ஒரு கதையைத் தேர்ந்தெடுப்பதை விட இக்காலத்தில் மலிந்து கிடக்கும் வாழ்க்கைச் சம்பவங்களைப் பொறுக்கி அதை ஓர் படமாகப் பிடித்தால் அதனுல் மக்கள் நிச்சயம் ஆதாயம் அடைவார்கள். படங்களில் இந்திர ஜாலங்களைச் செய்யும் பட முதலாளிகளுக்கு இது ஏன் தோன்ருமல் போகிறது?

நம் தமிழ்ப் படக் கலை முன்னேற வேண்டுமானுல் படத் தொழிலில் ஈடுபட்டவர்கள் அனைவரும் ஒரு முகமாக நல்ல படங்களை, சீரிய முறையில் தயாரிக்க வேண்டும். அவைகளில் நல்ல கருத்துகளும், மக்களுக்குப் பயன் படக் கூடிய தத்துவங்களும் நிறைய இருக்க வேண்டும். அப்பொழுதுதான் மேல் நாட்டுப் படங்களுக்கு நிகராக நம் படங்களும் இருக்க முடியும். இதைப் பட முதலாளிகள் உணர்ந்து ஆவன செய்வார்களா?

—"கோகு,"

சிதம்பரம்.

இது செய்தி

நிரந்தர வாலிபம்

டில்லியைச் சேர்ந்த பர்மான் என்ற இளைஞர் நிரந்தர வாலிபம் என்ற பெயருடன் இரண்டு ரீல்களில் ஒரு செய்திப் படத்தைத் தயாரித்திருக்கிறார். பண்டித ஜவஹர்லால் நேருவின் வாழ்க்கையில் முக்கியமான சில சம்பவங்களைத் தான் இப்பெயருடன் தயாரித்திருக்கிறார். இப்படத்திற்கான வியாக்கியானத்தை கே. ஏ. அப்பாஸ் எழுதியிருக்கிறார். இப்படம் ஆங்கிலம், ஹிந்தி, தமிழ் மூன்று பாஷைகளிலும் திரையிடக் கிடைக்குமாம்.

காஷ்மீருக்குத் தமிழ்ப் படங்கள்

காஷ்மீரிலுள்ள ஸ்ரீநகருக்கு, 16 மில்லிமீடர் படங்கள் திரையிடும் மூன்று சினிமா யந்திரங்களும், முப்பது நீளப் படங்களும் வந்துள்ளனவாம். இவைகளில மூன்று தமிழ்ப் படங்களும், மற்றவைகள் ஹிந்தி படங்களுமாகும். இப்படங்களெல்லாம் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள துருப்புகளுடைய பொழுது போக்கிற்காகவே வரவழைக்கப்பட்டுள்ளனவாம்.

தமிழில் "ரத்தன்"

ஹிந்திப் படமான "ரத்தன்" தமிழ் நாட்டில் பெற்ற வரவேற்பு மகத்தானது. சிறந்த இசைத் தட்டுகளை வெளியிட்டுவரும் கிராமபோன் கம்பெனியார் சில இசைத்தட்டுகளில் "ரத்தனை" தமிழில் வெளியிடப் போகிறார்கள். இதற்கான கதை, வசனம், பாட்டுகளை சென்னை ரேடியோ நிலையத்திலிருக்கும் "குகன்" தயாரித்திருக்கிறார். மேற்படி இசைத் தட்டுகள் ஜனவரியில் வெளிவரும் என்று தெரிகிறது.

சென்னைக்கு மற்றொரு தியேட்டர்

சென்னை கவர்னர் ஸர். கிருஷ்ண குமார் சிங்ஜி, நவம்பர் 26-உ காலை திருவொற்றியூர் ஹைரோடில் மஹாராணி டாக்கீஸைத் திறந்து வைத்தார். பொழுது போக்குப் படங்களோடு கல்வி அறிவை ஊட்டும் படங்களையும் இதன் நிர்வாகிகள் திரையிடுவார்கள் என்று கவர்னர் நம்பிக்கை தெரிவித்தார்.

இவ் வைபவத்திற்கு சென்னை அசம்பிளி உதவி சபா நாயகர் ஸ்ரீமதி ஸி. அம்மண்ண ராஜா தலைமை வகித்தார்.

படமுதலாளிகளும், பத்திரிகைக்காரர்களும், வட சென்னை கௌன்சிலர்களும், கார்ப்பரேஷன் கமிஷனர் ஸ்ரீ. ஸி. நரசிம்மனும் வேறு பிரமுகர்களும் பிரசன்னமாகியிருந்தனர். பின்னர் "மஹாத்மா விதுர்" என்ற ஹிந்திப் படம் திரையிடப் பட்டது.

படத் தொழிலுக்கு சர்க்கார் பண உதவி

சென்ற மாதம் 26-ம் தேதி பம்பாயில் நடைபெற்ற இந்தியச் சலனப் பட முதலாளிகள் சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் பம்பாய் உள் நாட்டு மந்திரி ஸ்ரீ. மொரார்ஜி தேசாய் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"இந்தியப் பட முதலாளிகள், சுதந்திர நாட்டிற்குத் தகுந்தபடி புதிய உயர்ந்த தரங்களை ஏற்படுத்திக் கொண்டு, படத் தொழிலை பொது ஜன நன்மைக்கான ஒரு சாதனமாகச் செய்ய வேண்டும். படத் தொழிலினால் சமூகத்தை உயர்த்தவும் முடியும், தாழ்த்தவும் முடியும். சினிமாவை

அறிவையும், பொழுது போக்கையும் அளிக்கவல்ல ஒரு கூட்டுச் சாதனமாகச் செய்துகொள்ளவேண்டிய காலம் வந்து விட்டது. வேண்டுமானல் சர்க்கார் பண உதவி அளிக்க, 'படத்தொழில் கூட்டுறவுச் சங்கங்களை' ஏற்படுத்திக் கொள்ளலாம்'' என்ருர்.

இக் கூட்டம் பம்பாய் ரஞ்சித் மூவிடோன் ஸ்டுடியோவில் நடைபெற்றது.

பிலிம் கிடங்குகள்

சினிமா பிலிம்களை தகுந்த முறையில் வைத்திருக்கச் செய்ய வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும்படியும், 1948-ம் வருஷ சினிமொடோகிராப் விதிகளின்படி பிலிம் கிடங்குகளுக்கு லைசென்ஸ்கள் வழங்கும்படியும், சர்க்கார் சென்னை நகர போலீஸ் கமிஷனருக்கும், ஜில்லா மாஜிஸ்டிரேட்டுகளுக்கும் உத்திர விட்டுள்ளது.

நாட்டிய அறங்கேற்றங்கள்

இம்மாதம் 5-ந் தேதி சென்னை கௌன்சிலர் ஸ்ரீ. கே. குப்புசாமி அவர்கள் முன்னிலையில் குமாரி. எம். கே. மீனுக்ஷி சுந்தரியின் பரத நாட்டிய அறங்கேற்றம் கோகலே ஹாலில் நடைபெற்றது. ஸ்ரீ. எம். நாகப்பசெட்டியாரின் செல்வியான இவர் வைதீஸ்வரன் கோவில் வி. ஆர். மஹாதேவ பிள்ளையின் சிஷ்யை ஆவார்.

அதே ஹாலில் இம்மாதம் 10-ந் தேதி, பேராசியர் ஸ்ரீ. பி. சாம்பமூர்த்தி தலைமையில் மற்ருெரு அறங்கேற்றம் நடை பெற்றது. அறங்கேறிய பேபி விட்டோ பாய், பரத நாட்டிய வித்வான் பி. எஸ். கண்ணப்ப முதலியார், மிருதங்க வித்வான் எம். ஆர். துரைராஜ் இவர்களின் சிஷ்யை.

இம்மாதம். 12-ந் தேதி மியூஸியம் தியேட்டரில் தஞ்சாவூர். டி. கே. சுசீலாவின் பரத நாட்டியம் நடைபெற்றது. பந்தனல்லூர் பாணியில் நடை பெற்ற முதல் கச்சேரி யாகும் இது. ஸ்ரீ. பிச்சையா பிள்ளையின் சிஷ்யை யாவார் இவர். தலைமை வகித்த ஸ்ரீ. ஈ. கிருஷ்ணய்யர் நாட்டியத்தை மிகவும் சிலாகித்துப் பேசினுர்.

குமாரி டி. கே, சுசீலாவின் பரத நாட்டிய அரங்கேற்றம் டிசம்பர் 12-ந் தேதி மியூஸியம் தியேட்டரில் நடைபெற்றது.

புதிய சினிமாச் சட்டம்

தணிக்கை போர்டார் பார்த்து அங்கீகாரம் செய்வதற்கு வழி காட்டியாக சென்னை சர்க்கார் ஒரு புதிய சினிமா சட்டத்தை வெளியிட்டிருக்கிருர்கள். இதில் ஒழுக்க அம்சங்கள், சட்டத்தையும் மதத்தையும் மதித்து நடப்பது சம்பந்தப்பட்ட வழக்கமான விதிகளுடன் மது விலக்கு சம்பந்தமான விதிகளும் புதிதாகச் சேர்க்கப் பட்டுள்ளன.

இது சம்பந்தமாக விதிகள் கூறுவதாவது:—

ஒரு படத்தில் வரும் காட்சிகள் மது விலக்கை கேலி செய்வதாகவோ, மதுவிலக்குத் திட்டத்தை அலக்ஷியம் செய்வதாகவோ, மது விலக்குச் சட்டங்களை மீறத் தூண்டும் படியாகவோ இருந்தாலும் சரி; அல்லது குடிப்பதை பெருமைப்படுத்துவதாகவோ, குற்றமில்லாத ஒரு சமூக வழக்கம் போலவோ, ஆரோக்கிய

மானதென்றும், கௌரவக் குறைவு ஏதும் இல்லை என்றும், ஆதரவு தேடுவதாகவோ, ஒரு மத அனுஷ்டானமாகக் காட்டுவதாகவோ இருந்தாலும் சரி, இத்தகைய காட்சிகள் ஆட்சேபகரமானவை. இப்படிப் பட்டவைகளை மாகாணத்தில் காட்டப்படும் எல்லாப் படங்களிலிருந்தும் நீக்கி விட வேண்டும்.

இதர மாகாண தணிக்கை போர்டுகளில் அனுமதிக்கப்பட்டு இம்மாகாணத்திற்கு வரும் படங்களையும் இனி தணிக்கை செய்து அவற்றில் 'குடிக்கும் காட்சிகள்' இருந்தால் அவைகளை நீக்கி விட வேண்டும்.

ஏற்கனவே தணிக்கை செய்யப்பட்டிருந்தால் அவற்றையும் நீக்கி விட வேண்டும்.

வெளி நாடுகளிலிருந்து படங்களை இறக்குமதி செய்கிறவர்களும் மாகாண தணிக்கை போர்டுக்கு அனுப்பும் படங்களில் மேற்சொன்ன காட்சிகள் இல்லாமல் அனுப்ப வேண்டும் என்று அந்தப் பட உற்பத்தியாளர்களுக்கு தெரிவித்துவிட வேண்டும்.

அறிவூட்டக் கூடிய முறையில் குடிக் காட்சிகள் இருந்தால் அவற்றை அனுமதிக்கலாம். அதாவது மதுவிலக்கை ஆதரிப்பதாகவும், குடிப்பதை கண்டு பிடிப்பதாகவும், அதன் கேடுகளை உணர்த்துவதாகவும் இருந்தால் அனுமதிக்கலாம்.

“நேத்தி நாடகத்திலே நம்ம சாம்பு பாட்டை ஆரம்பிச்சு பல்லவியை முடிக்கிறதுக்குள்ளேயே எவனோ ஒரு செருப்பை வீசி எறிஞ்சானும். சாம்பு பேசாமல் பாட்டை நிறுத்திட்டு பின்புற வழியாய் ஓடி வந்துட்டானும்.”

“சுத்த முட்டாள்! அனுபல்லவியையும் பாடியிருந்தால் இன்னொரு செருப்பும் கிடைத்திருக்குமல்லவா!”

சர்க்காரும் நீளக் கட்டுப்பாடும்

சென்ற மாதம் 27-ந் தேதி மேல் சபை கூடிய போது ஸ்ரீ. எஸ். பி. ஆதித்தன் கேட்ட கேள்விக்கு கல்வி மந்திரி. ஸ்ரீ. டி. எஸ். அவினாசிலிங்கம் கீழ்கண்டவாறு பதிலளித்தார்:—

“சினிமாக்களில் காட்டப்படும் படங்களின் நீளம் பற்றி தற்போது எவ்விதத் தடையும் கிடையாது. ஆனால் இவ்விதத் தடை விதிப்பது பற்றிய யோசனை பரிசிலனை செய்யப்பட்டு வருகிறது. இதுவரை தென்னிந்திய பிலிம் வர்த்தக சபையாரிடமிருந்து எழுத்து மூலமாக எவ்வித விண்ணப்பமும் வரவில்லை. ஆனால் பூர்வாங்கமாக பிலிம் சபைகள் கலந்து ஆலோசிக்கப் பட்டன. உத்தேசித்துள்ள தடைகளை அவர்கள் ஆதரிக்கின்றனர் 3 அல்லது. 3½ மணி நேரத்திற்கு அதிகமாக ஓடும் படங்கள் சினிமாவிற்குச் செல்வோரது கண்களைப் பாதிக்கும் என்றும், எனவே பொது ஜன சுகாதாரத்தை உத்தேசித்து இவ்வித நீண்ட படங்களை அனுமதிக்கக் கூடாது என்றும் ஒப்புக் கொள்ளப் பட்டுள்ளதாகவும் கூறினார்.

ஸ்ரீ. ஆதித்தன், “சர்க்கார் ஏற்றது எனக்கருதும் நீளம் எவ்வளவு?” என்று கேட்டார். அதற்கு கல்வி மந்

நிரி, சுமார், 13,000 அல்லது 14,000 அடிகள் என்று பதிலளித்தார்.

நமது இந்தியா

இப்பொழுது பிரேஸிலில் இந்திய ஸ்தானிகராயிருக்கும் ஸ்ரீ. மினு மஸானியின் "நமது இந்தியா" ஒரு முழுநீள டாகுமென்டரி படமாகத் தயாராகிறது. இந்தியாவின் விவசாயம், கைத் தொழில் அபிவிருத்தியைச் சித்தரிக்கும் படம் இது.

இந்தப் படத்திற்காக சமீபத்தில் லண்டனில் ராம் கோபாலின் இரண்டு நடனக் காட்சிகள் (சிவ தாண்டவம், ராதாகிருஷ்ண) படமெடுக்கப்பட்டன.

சென்னை சர்க்காரின் விவசாய இலாகா அதிகாரியான ஸ்ரீ. வி. ரங்காச்சாரியின் புத்ரி (ஸ்ரீ. குண்டுசியின் மருமாள்) சௌ. லக்ஷ்மிக்கும், ஆக்ஸ்போர்டு யூனிவர்ஸிடி பிரஸ்ஸைச் சேர்ந்த சி. கோபால்சாமிக்கும் இம் மாதம் 5-ந் தேதியன்று சென்னையில் அதி விமரிசையாக திருமணம் நடந்தேறியது.

இந்தியப் படத் தொழிலுக்கு நல்ல காலம்

இந்திய சர்க்கார் இந்தியப் படத் தொழிலின் நிலைமையைக் குறித்து ஆராய ஒரு விசாரணைக் கமிட்டியை நியமிக்க உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது. இது சம்பந்தமாக இந்திய சலனப் பட முதலாளிகள் சங்கம், தென்னிந்திய பிலிம் வர்த்தக சபை, போன்ற ஸ்தாபனங்களின் கருத்தை இந்திய சர்க்கார் கேட்டிருப்பதாகவும் தெரிகிறது.

இந்த விசாரணையின் மூலம் இப்போது திருப்திகரமான நிலைமையில் இல்லாத நம் படத் தொழில் ஸ்திரமடைந்து பல வகைகளிலும் அபிவிருத்தியடையுமென்று எதிர்பார்க்கலாம்.

நம் நாட்டின் பிரதான கைத் தொழில்களில் ஒன்றாயிருந்தும் படத் தொழிலின் நிதி நிலைமை மோசமாகிக் கொண்டு வருகிறது. இது சம்பந்தமாக ஆராய தென்னிந்திய பிலிம் வர்த்தக சபை ஒரு கமிட்டியை நியமித்து இருக்கிறது. பம்பாய் பட முதலாளிகளும் இதைப் பற்றி சர்க்காரிடம் முறையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்திய சர்க்கார் நடத்தும் விசாரணையின் மூலம் இதற்கு ஒரு பரிகாரம் ஏற்பட முடியும். படங்களின் தரம் உயரவும் வழி செய்ய முடியும். தேச முன்னேற்றத்திற்கும் மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் இந்த அரிய சாதனம் பயன்படும் வகையில் ஒரு திட்டம் உருவாகலாம். இந்திய சர்க்கார் இப்போது உத்தேசித்துள்ள இந்த விசாரணை மூலம் இன்னும் அநேக நன்மைகள் ஏற்படக் கூடும்.

காளி தாஸன்.

சென்னையில் புதிதாக ஆரம்பிக்கப் பட்டுள்ள "அரவிந்த்" புரொடக்ஷன்ஸ் "காளி தாஸன்" என்ற தமிழ்ப் படத்தை தயாரிக்கப் போகிறார்கள். டி. ஆர். மஹாலிங்கம், என். ஸி. வசந்த கோகிலம், எஸ். வி. சகஸ்ரநாமம், டி. ஆர். ராமச்சந்திரன் ஆகி

யோர் இப்படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ளார்கள்.

இப்படத்திற்கான கதையை எஸ். டி. எஸ். யோகி எழுதியுள்ளார். எம். திருவேங்கடமும், கே. வேம்புவும் டைரெக்ட் செய்வார்கள். ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோவில் தயாரிக்கப்படும்.

கொச்சி பிலிம் சேம்பர்

கொச்சி சமஸ்தானத்தில் சினிமாத் தொழிலை பாதுகாக்க அங்குள்ள சினிமாத் தியேட்டர் முதலாளிகளும் சினிமா தொழில் பிரமுகர்களும் ஒன்று சேர்ந்து "கொச்சி பிலிம் சேம்பர்" என்ற ஒரு ஸ்தாபனத்தை சென்ற மாதம் ஆரம்பித்திருக்கிறார்கள். ஸ்ரீ. கேரளவர்மா, தாமாபுரம் தான் அதற்குத் தலைவர். கொச்சி சர்க்காரால் உயர்த்தப் பட்ட தமாஷா வரி தொழிலை பாதிக்கக் கூடும் என்பது பற்றி பொக்கிஷ மந்திரியைக் கண்டு பேச ஏழு மெம்பர்கள் அடங்கிய ஒரு கமிட்டியை நியமித்திருக்கிறார்கள்.

ஹரிகதா காலக்ஷேபம்

சென்ற மாதம் 28-ம் தேதி ஸ்ரீ. சரஸ்வதி கான நிலைய தலைவி கே. லலிதாவின் சிஷ்யையான குமாரி கே. ரங்கநாயகி "குசேலோபாக்யானம்" என்ற ஹரிகதா காலக்ஷேபம் செய்தார். ஸ்ரீ. தியாகையர் உத்சவ நிதிக்காக இக் கதா காலக்ஷேபம் நடைபெற்றது.

சென்ட்ரல் பிலிம் லைப்ரரி

மாகாணத்திலுள்ள பள்ளிக்கூடங்களில் திருஷ்டி போதனை முறையை ஏற்படுத்துவதற்காக "சென்ட்ரல் பிலிம் லைப்ரரி" ஒன்றை ஆரம்பிக்க சென்னை சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனர். இந்த லைப்ரரி கல்வி சம்பந்தமான படங்களை நிறைய சேகரித்து வைக்குமாம்.

ஸ்ரீ ஆண்டாள்

சேலம் சூர்யா பிலிம்ஸ் தயாரிப்பான ஸ்ரீ ஆண்டாள் படத்தின் வர்த்தகக் காட்சி சென்ற மாதம் 26-ந் தேதி சேலம் குகை அம்பிகா டாக்கிஸில் நடைபெற்றது.

புரட்சி

ஸ்ரீ ராம பாலகான விநோத சபையார் இம்மாதம் 6-ந் தேதி முதல் திண்டுக்கல் சோலை ஹாலில் "புரட்சி" நாடகத்தை நடத்தி வருகின்றனர். இந்த நாடகத்தில் வில்லன் மேஜர் மேதாவியாக நடிக்கும். ஆர். ஏ. குமரப்பாவின் நடிப்பு பிரமாதமாய் இருக்கிறதாம்.

வாடியா ஸ்டுடியோ

பம்பாயிலுள்ள "வாடியா ஸ்டுடியோ"வை குத்தகைக்கு எடுத்திருந்த டைரெக்டர், ஸ்ரீ. வி. சாந்தாராம் அதைத் தாமே விலைக்கு வாங்கிவிட்டாராம்.

'சர்வாதிகாரி'க்குத் தடை

சென்னை அரசாங்கத்தார் "சர்வாதி காரி" என்னும் தமிழ் நாடகத்தை மாகாணத்தில் எங்குமே நடிக்கக் கூடாதென தடை யுத்தரவு விதித்திருக்கின்றனர்.

தியேட்டர்களில் தேசியக் கொடி

'டில்லி செங்கோட்டை மீது பறக்கும் தேசியக் கொடியின் படம் கொடுப்பதற்கில்லை என்று இந்திய சர்க்கார் சொல்லி விட்டதால், தியேட்டர்காரர்கள் ஒவ்வொரு காட்சி முடிவிலும் தங்கள் கைவசம் இருக்கும் இந்திய தேசியக் கொடிப் படத்தையே காட்டலாம்' என்று சென்னை சர்க்கார் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

சென்னையில் மும்தாஸ் அலி

பம்பாய் டாக்கிஸ் படங்களின் நாட்டிய டைரெக்டரான மும்தாஸ் அலி தமது கோஷ்டியுடன் சென்னைக்கு விஜயம் செய்திருந்தார். இம்மாதம். 4, 6, 7, 8, தேதிகளில் அவரது கோஷ்டியின் நடனங்கள் நடை பெற்றன.

கருணைகரனையும் அவனது மனைவியையும் பார்த்த பிறகு தானும் பாமினி ஸ்டுடியோவில் ஒரு வேலையிலமர்ந்துவிட வேண்டுமென்று தீர்மானித்தான் நாகராஜன். அவன் ஒரு செல்வந்தர் வீட்டுப் பிள்ளை. மேலும் எம். ஏ. பரீக்ஷையில் தேறியவன்.

படுமோசமாகிக் கொண்டு வரும் சினிமாத் தொழிலை புனருத்தாரணம் செய்தே தீருவது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்தார் பாமினி ஸ்டுடியோவின் முதலாளி. ஆண் பெண் இரு பாலாரும் கௌரவமாகவும் சுயேச்சையாகவும் வாழ அவர் பல ஏற்பாடுகளைச் செய்திருந்தார். "நடிகை". என்றால், "ஈசத்தனமுடையவள்" என்ற இழிச் சொல்லே தம் ஸ்டுடியோவில் வரக்கூடாது என்ற கொள்கையை நடைமுறையில் நடத்திக் காட்டிக் கொண்டிருந்தார் மிஸ்டர் தாஸன். நடிகைகளின் மேக்–அப், ஹாஸ்டல் நிர்வாகம், தேகப் பயிற்சி முதலான விஷயங்களைக் கவனிப்பதற்கு மேல் நாட்டிலிருந்து தேர்ச்சி பெற்ற பல மாதர்களை தம் ஸ்டுடியோவில் அவர் அமர்த்தியிருந்தார். பெண்மைக்குப் பரிபூர்ண பாதுகாப்பு இருந்த அந்த ஸ்டுடியோவில் ஆண்களும் கௌரவமாகப் பழக வேண்டிய நிர்பந்தம் தானாகவே ஏற்பட்டு விட்டது. கலையார்வம் கொண்ட உயர் குடும்பப் பெண்களும், தக்க பாதுகாப்புகளுடன், தங்கள் பெயருக்கு இழுக்கு ஏற்படாவண்ணம் சினிமாவில் நடித்துப் பிரசித்தி பெற அவருடைய ஸ்தாபனம் பெரிதும் உதவிக் கொண்டிருந்தது. இந்த பாமினி ஸ்டுடியோவில் தான் நாகராஜனுடைய நண்பன் கருணைகரன் வேலை பார்த்து வந்தான்.

தற்செயலாக ஒரு நாள் பீச்சில் கருணைகரனைச் சந்தித்தான் நாகராஜன். தன்னருகில் நின்றபெண்ணை நாகராஜனுக்கு அறிமுகப் படுத்தும் முறையில் "இவள்தானப்பா என் மனைவி ஸ்ரீதேவி. என்னோடு எங்கள் ஸ்டுடியோவிலேயே வேலையிலிருக்கிறாள்" என்றான்.

"காதல் திருமணம் போலிருக்கிறது" என்றான் நாகராஜன் சிரித்துக் கொண்டே.

"ஆமாம் எங்கள் ஸ்டுடியோவின் ஸ்திரீகள் செக்ஷனிலிருந்த ஸ்ரீதேவி

வெண்டாகு

யை நான் மனைவியாக அடையப் பட்ட பாடு கொஞ்ச நஞ்சமா? அவளும் ஒரு பி. ஏ. தான். ஆர்ட் செக்ஷனில் வேலை செய்கிறாள். எங்கள் நோக்கத்தை பிரஸ்தாபித்த போது முதலாளி கொஞ்சத்தில் இசையவில்லை. வாழ்க்கையின் ஒரு முக்கிய அம்சமாக கலை மேம்பாட்டைக் கொள்வதானால் தான் இவளைக் கலியாணம் செய்து கொள்ளலாம்' என்றார். நாங்கள் சம்மதித்தோம். எங்களைப் போல இன்னும் எவ்வளவோ பேர்கள் கணவன் மனைவிகளாகவே பாமினி ஸ்டுடியோவில் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்" என்றான் கருணைகரன்.

"எங்கள் ஸ்தாபனத்தை சினிமாக் கலைக்கு உயரிய முறையில் தொண்டு செய்து வரும் ஒரு கூட்டுக் குடும்பமாக மாற்றி விட்டார் எங்கள் முதலாளி" என்று பெருமையாகச் சொன்னாள் ஸ்ரீதேவி.

அன்று முதல் நாகராஜனுடைய மனம் பாமினி ஸ்டுடியோவைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தது. சங்கீதம், நாட்டியம் ஆகியவற்றில் அவ

னுக்குப் பித்து அதிகம். ஆகலால், தானும் ஏன் சினிமாத் தொழிலில் ஈடுபடக் கூடாது என்று எண்ணலானான். முதலில் அவனுடைய தந்தை தம் பிள்ளை தேர்ந்தெடுத்த உத்தியோகத்தைப் பற்றி அவ்வளவாக திருப்தி கொள்ளவில்லை. எனினும் ஒழுக்கத்தில் பிரசித்தி பெற்ற பாமினி ஸ்டுடியோவில் நாகராஜன் சேர விரும்பியதை அறியவும் சம்மதித்தார்.

மனைவி

ஸ்டுடியோவில் உத்தியோகம் கிடைத்த நாளாக மிகவும் உற்சாகத்தோடு இருந்தான் நாகராஜன். தன் நண்பன் கருணாகரனுக்கு ஸ்ரீதேவி மனைவியாக வாய்த்ததைப் போலவே தனக்கும் அந்த ஸ்டுடியோவில் ஓர் அழகிய மனையாள் கிடைக்காமற் போக மாட்டாள் என்ற நம்பிக்கை—அவன் மனதில் வேரூன்றலாயிற்று,

பத்ம பாரதி

ஆனால் அவனுடைய திட்டங்களை அவனது தாய் ஒரேயடியாகக் குலைத்து விடுவாள் போலத் தோன்றியது. எங்கேயோ மதுரையிலிருக்கும் தன் தம்பியின் பெண் விமலாவை அந்த வருஷமே எப்படியாவது நாகராஜனுக்கு விவாகம் செய்து வைத்து விட முயன்று கொண்டிருந்தாள் அந்த அம்மாள். அவனுடைய தகப்பனாரும் இந்த ஏற்பாட்டிற்கு உடந்தையாக இருந்தது அவனுக்கு மிகவும் வருத்தத்தை உண்டாக்கியது.

“இன்றிரவு நீ என்னை மதுரைக்கு அழைத்துக் கொண்டு போக வேண்டும். உன் மாமா உடனே வரச் சொல்லி கடுதாசி போட்டிருக்கார்” என்றாள் அவனுடைய அம்மா அவனிடம்.

நாகராஜனுக்கு ஒரே எரிச்சலாக வந்தது. “நான் மதுரைக்கு வர முடியாது, அம்மா” என்றான் கண்டிப்பாக.

“நீ சம்பிரதாயத்துக்காவது ஒரு முறை போய் பெண்ணைப் பார்த்து விட்டு வர வேண்டாமா? எப்பொழுதோ விமலா சின்னவளாயிருந்த போது பார்த்தது தானே நீ” என்றாள்.

நாகராஜன் முகத்தைச் சுளித்தான்:

“எனக்கு இப்பொழுது கலியாணமே வேண்டாமம்மா. அப்படியே செய்து கொண்டாலும் உன் அண்ணாவின் பெண் விமலா வேண்டாம்” என்று சொன்னான் நாகராஜன்.

“அப்படியானால் வேறெந்தப் பெண்ணையாவது ஏற்பாடு செய்கிறேன். காலா காலத்தில் உனக்கு கலியாணம் செய்து வைக்க வேண்டியது எங்கள் பொறுப்பு இல்லையா?” என்றாள்.

“சீர், செனத்தி, பணம் காசுக்கு என்னை விற்றுக் கொள்ள நான் இஷ்டப்படவில்லை, அம்மா. ஒரு நாள் எங்கள் ஸ்டுடியோவிற்கு வந்து பார். நன்றாகப் படித்துப் பட்டம் பெற்ற எவ்வளவு பெண்கள் அங்கே வேலை செய்கிறார்கள், தெரியுமா? அவர்களில் எவரையாவது தான் கலியாணம் செய்து கொள்ளப் போகிறேன்” என்று மனதிலுள்ளதை ஒருவாறாகப் பிரஸ்தாபித்தான் நாகராஜன்.

தாயாருடைய முகம் சுண்டியது. “சிவ, சிவ! இப்படிக் கூட உன் புத்தி கெட்டுப் போய் விடுமா? போயும் போயும் ஒரு சினிமாக் காரியைக் கலியாணம் செய்து கொள்கிறேன் என்கிறாயே. எங்கேயாவது அப்பாவின் காதில் விழுந்து வைக்கப் போகிறது, ஜாக்கிரதை!” என்று எச்சரித்து விட்டுச் சென்றாள் தாயார்.

நாகராஜனுடைய மனோபீஷ்டம நிறை வேறுவதற்கான சில சூசகங்கள் தென்படலாயின. அதாவது குமாரி வத்ஸலா அவனுடைய இலாக்காவில் புதிய உதவி வசன கர்த்தாவாக வந்த நாளிலிருந்து தன்னைப் போன்ற அதிருஷ்டசாலியே கிடையாதென்று எண்ணிக் கொண்டான் நாகராஜன். சமீபத்தில் தான் அவள் பி. ஏ. பாஸ் செய்ததாகவும், பாமினி ஸ்டுடியோ முதலாளிக்கு ரொம்பவும் வேண்டிய வரது பெண் என்பதையும் தெரிந்து கொள்ள அதிக நாளாகவில்லை நாகராஜனுக்கு.

வத்ஸலாவை தனிப்பட்ட முறையில், அவள் மேற்கொண்ட வேலையில் பயிற்சியளிக்கும் பொறுப்பை நாகராஜனிடம் ஒப்படைத்திருந்தார் ஸ்ரீ. தாஸன்.

ஆரம்பத்தில் சற்றே சங்கோசத்துடன் தன்னுடன் பழகிய வத்ஸலா நாளடைவில் தனக்கு மிகவும் அன்னியோன்னியமாகி வருவதாகத் தோன்றியது நாகராஜனுக்கு. அவனுடைய பெருந்தன்மையான குணமும் நடவடிக்கைகளும் வத்ஸலாவுக்கு ரொம்பவும் பிடித்துப் போயிருந்தன போலும்.

காலையில் ஸ்டுடியோவின் காரில் யாரோ ஒரு பெரியவருடன் வருவாள் வத்ஸலா. அவள் வருவதற்கு முன்பே ஆபீசுக்கு வந்து விடுவான் நாகரா

ஜன். ஒரு பெரிய ஹாலில், ஏராளமான ஆண்களும் பெண்களுமாக வேலை செய்து வரும் இடத்தில் தன் மனோபாவங்களை வெளிக்காட்டிக் கொள்ள முடியாமல் இருந்தது நாகராஜனுக்கு. இதற்கிடையே தன் பெற்றோர் தன் விவாக விஷயமாக ஒன்றும் செய்யாமலிருக்க வேண்டுமே என்ற கவலையும் அவனை பலமாக அரித்துக் கொண்டிருந்தது.

எப்படியோ நான்கைந்து மாதங்கள் கழிந்து விட்டன. நாகராஜனுடைய அம்மாவும் அப்பாவும் இரண்டு மூன்று முறை அவனுடைய மாமாவின் வீட்டிற்குச் சென்று வந்தும், ஒன்றும் பேசாமலிருந்தது மர்மமாகவே இருந்தது நாகராஜனுக்கு. ஆனால் எப்படியாவது அப்பா அம்மாவை மன்றாடியாவது வத்ஸலாவை மணம் செய்து கொண்டு விடலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருந்தது அவனுக்கு.

அப்பொழுது சட்ட சபையில் ஹிந்து விவாக சீர்திருத்த மசோதாவைப் பற்றிய விவாதம் நடந்து கொண்டிருந்தது. அன்றைய பேப்பரில் இது சம்பந்தமாக வெளியான விவாதங்களை சுவாரஸ்யமாகப் படித்துக்கொண்டிருந்தான் நாகராஜன்.

அப்பொழுது அங்கு வந்த வத்ஸலா "என்ன காந்திஜி கொலை வழக்கைப் படித்துக் கொண்டிருக் கிறீர்களோ?" என்ற ஒரு கேள்வியின் மூலம் தான் வந்திருப்பதை தெரிவிக்க முயன்றாள்.

"எல்லாம் உங்களைப் போன்ற பெண்கள் சம்பந்தப்பட்ட செய்தியைத் தான் படித்துக் கொண்டிருந்தேன். பேராசை பிடித்த பெற்றோர்களின் மண்டையில் அடிப்பதேபோல வரதக்ஷிணை, சீர், செனத்தி தடைச் சட்டம் கொண்டு வந்தால்தான் நம் சமூகம் முன்னேற முடியும்" என்றான்.

வத்ஸலா யாதொரு பதிலும் கூறாமல் ஒரு பெருமூச்சு விட்டாள். இதனால் நாகராஜனுக்கு மேலும் கொஞ்சம் பேச சந்தர்ப்பம் கிடைத்தது.

[தொடர்ச்சி 64-ம் பக்கத்தில்]

பிரம்மலோகம்

சக்ரதாரி

இம்மாதம் 3-ம் தேதி திரையிடப்பட்ட ஜெமினியின் இப்படம் தமிழ் நாட்டில் அமோகமான வரவேற்பைப் பெற்று வருகிறது. பொங்கல் சமயத்தில் ஆந்திர தேசத்திலும் திரையிட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

சந்திரலேகா

ஜெமினியின் (ஹிந்தி) 'சந்திரலேகா' இம்மாதம் 24-ம் தேதி முதல் பம்பாய், கல்கத்தா போன்ற வட நாட்டின் முக்கியமான நகரங்களில் திரையிடப்பட்டிருக்கிறது. இப்படத்திற்காக பம்பாயில் செய்துள்ள விளம்பரத்தைப் பார்த்த ஒருவர் பிரமாதமாய்ப் புகழ்கிறார்.

ஒளவையார்

கொத்தமங்கலம் சுப்புவின் டைரெக்ஷனில் மளமளவென்று தயாராகின்றது இப்படம். சக்தி நாடக சபாவில் நடிகராயிருந்த டி. வி. வேலையா இப்படத்தில் நடிக்க ஏற்பாடாகியிருக்கிறதாம்.

நாட்டிய ராணி

பாஸ்கர் பிக்சர்ஸார் தயாரித்து வந்த—நடுவில் நின்று போயிருந்த இப்படம் மீண்டும் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. பி. என். ராவ்தான் இதன் டைரெக்டர். வசுந்தரா தேவிக்குப் பதிலாக பி. எஸ். சரோஜா ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார்.

அம்பிகாதேவி

நடுவில் தடைப்பட்டு நின்றிருந்த இப் படத்தின் வளர்ச்சி மீண்டும் நியூடோன் ஸ்டுடியோவில் ஆரம்பமாகியிருக்கிறது. டி. ஆர். மஹாலிங்கம், எம். வி. ராஜம்மா நடிக்கும் இப்படத்தின் டைரெக்டராக டி. ஆர். கோபு நியக்கப்பட்டிருக்கிறார்.

கிருஷ்ண பக்தி

பல லக்ஷக் கணக்கான ரூபாய்களில் தயாரிக்கப்பட்ட, நக்ஷத்திர நடிகர்கள் நடிக்கும் இப்படம் பொங்கல் தினத்தன்று 40 நகரங்களில் திரையிடப்பட ஏற்பாடாகி வருகிறதாம்.

நல்ல தம்பி

படம் முடிவடைந்து நகாசு வேலைகள் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது. பானுமதி, சகஸ்ரநாமம், கிருஷ்ணன், மதுரம் நடிக்கும் இப்படம் பலசிர்த்திருந்த தோக்கங்கள் உள்ளதாக இருக்குமாம். பொங்கல் வெளியீடாக இருக்கும் போலிருக்கிறது.

லைலா மஜ்னு

அழியாப் புகழ் பெற்ற இந்தக் காதல் சித்திரத்தை ஓர் சிறந்த படமாகத் தயாரிக்க நாகூர் முயற்சி செய்து வருகிறார். மஹாலிங்கம், ராஜம்மா தோன்றும் சில காக்ஷிகள் சமீபத்தில் படமாக்கப்பட்டன.

பாரிஜாதம்

இது நாள் வரை சோபனசலாவில் தயாராகி வந்த இப்படம் சமீபத்தில் நியூடோன் ஸ்டுடியோவிற்கு மாறியிருக்கிறது. மஹாலிங்கம், பி. எஸ். சரோஜா பிரதம பாகங்களில் தோன்றும் இப்படத்தை ஏ. டி. கே. டைரெக்ட் செய்து வருகிறார்.

தேவமனோஹரி

ஹொன்னப்ப பாகவதர், பி. எஸ். சரோஜா பிரதம பாகங்களில் தோன்றும் இப்படம் ஒரு கிராமியக் கதையாகும். பிரகதி, சோபனசலா ஆகிய இரு ஸ்டுடியோக்களிலும் ஏ. டி. கே. யின் டைரெக்ஷனில் விரைவாய் தயாராகி வருகிறது இப்படம். இப்படத்திற்காக பானுமதி, எம். ஆர். சுவாமிநாதன் ஆகியோரும் ஒப்பந்தமாகியிருக்கின்றனர்.

ரக்ஷ ரேகா

டைரெக்டர் ஆர். பத்மனபனின் இந்தத் தெலுங்குப் படம் நெப்டியூனிலும், பிரகதியிலுமாக தயாராகி வருகிறது. பிரதம பாகத்தில் பானுமதி நடிக்கிறார்.

கீத காந்தி

இன்னும் இரண்டொரு காட்சிகள் முடிவடைந்தால் "கீத காந்தி" திரையிடத் தயாராகி விடும். சமீபத்தில் ஹாஸ்ய நடிகர் டி. ஆர். ராமச்சந்திர

னும், ஆர். பத்மாவும் தோன்றும் ஒரு காக்ஷி படமாக்கப் பட்டது.

இன்பவல்லி

சேலம் ரத்னா ஸ்டுடியோவில் தொடானியின் டைரெக்ஷனில் தயாராகி வரும் இப்படத்திற்காக பி. எஸ். சரோஜாவும், பி. சுந்தர் ராவும் தோன்றும் சில காக்ஷிகள் சமீபத்தில் படமாக்கப் பட்டன.

சுதர்சன்

சின்னப்பா, கண்ணாம்பா, பி. எஸ். சரோஜா, யோக மங்களம் தோன்றும் ராயல் டாக்கீஸாரின் இப்படம் சுந்தர் ராவ் நட்கர்னி டைரெக்ஷனில் தயாராகிவருகிறது. தமிழ் வருஷப் பிறப்பன்று தமிழ் நாடெங்கும் திரையிடப்பட விருக்கும் இப்படத்திற்கான வசனங்களை 'வேலவன்' எழுதிக் கொடுத்திருக்கிறாராம்.

வேலைக்காரி

ஜுபிடர் பிக்சர்ஸின் அடுத்த வெளியிடு இப்படம். இதன் கதை சி. என். அண்ணாதுரையால் எழுதப்பட்டதாகும். எம். வி. ராஜம்மா. வி. என். ஜானகி, கே. ஆர். ராமசாமி இவர்களைப் பிரதம நடிகர்களாகக் கொண்டு ஏ. எஸ். ஏ. சாமியின் டைரெக்ஷனில்சென்ட்ரல் ஸ்டுடியோவில் தயாராகி வருகிறது.

குணசுந்தரி

அஜித் புரொடக்ஷன்ஸாருக்காக, பம்பாய் ரஞ்சித் மூவிடோனில், பாலசந்திரா தயாரித்து வந்த இப்படம் முடிவடைந்து நடிகர்கள் சென்னைக்கு வந்து விட்டார்கள். பாலசந்திரா, நந்தினி, வி. செல்லம், பி. சீதாராமன், டி. கே. பட்டம்மாள், டி. எஸ். கோகிலம் ஆகியோர் நடிக்கும் இப் படத்தின் டைரெக்ஷன், மியூஸிக் டைரெக்ஷன் ஆகிய பொறுப்புகளை எஸ். பாலச்சந்திரன் ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

கனகாங்கி

ஸ்டேட் புரொடக்ஷன்ஸார் பம்பாய் மோஹன் மூவிடோனில் 'கனகாங்கி' என்ற புராணப் படத்தைத் தயாரித்து வருகிறார்கள். இப்படத்தில் வி. என். ஜானகி, கிருஷ்ணசர்மா, செல்லம், சீனிவாஸன், நந்தினி, குமாரி சுப்புலக்ஷ்மி முதலியோர் நடிக்கின்றனர்

நாக்குத் தூக்கி

ராகினி பில்ம்ஸாரின் இப்படத்தில் டி. ஆர். மஹாலிங்கமும், அஞ்சலி தேவியும் பிரதம பாகத்தில் நடிக்க ஏற்பாடாகி யிருக்கிறது. இப் படத்தை பி. புல்லையா டைரெக்ட் செய்வார்.

ஜெமினியின் புதிய நக்ஷத்திரமான நூர்யப்ரபா "சக்ரதாரி"யில் மற்றும் ஒரு படி மேல் செல்லுகிறார்.

ஸ்டாக்கு
கொஞ்சமே
உள்ளது

☆

தேவைக்கு
உடனே
எழுதுங்கள்

☆

ஜுபிடர் மில்ஸாரின்

மெர்ஸிரைஸ்டு

கைக்குட்டைகள்

ஆடவரும் பெண்மணிகளும் மிகவும் விரும்பக் கூடிய நேர்த்தியான கைக்குட்டைகள். டஜன் 1-க்கு ரூ. 10½ தான். உங்கள் தேவைக்கு முன் பணத்துடன் எழுதவும். அல்லது 25% தொகையை அட்வான்ஸாக அனுப்பினால் வி. பி. மூலம் அனுப்பப்படும். வியாபாரிகளுக்கு 6¼% கமிஷன் தரப்படும். ஸ்டாக் அதிகமில்லை. உடனே முந்திக்கொள்ளுங்கள்.

விவரங்களுக்கு:

கே. ஆர். நாராயணன்,

246, தம்புச் செட்டித் தெரு, சென்னை, 1.

புஸ்தகப் பொழுது

பார்வதி

[ஆசிரியர்: "சங்கரராம்." வெளியிட்டோர்: ஏ. என். பூர்ணு அண்டு கம்பெனி, 6, அபிராமபுரம் முதல் தெரு, தேனும்பேட்டை, சென்னை 18. விலை ரூ. 3-12-0]

வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களை தெளிவாக எடுத்துக் காட்டக் கூடியவர் ஆசிரியர் சங்கரராம். அதே ரீதியில் பார்வதியும் அமைந்திருக்கிருள். சம்பவங்கள் அதிகமில்லாமலும், சிக்கல் ஏற்படாமலும், மிகவும் தெளிவாகவும் நவினம் இருக்கிறது. பார்வதியைப் படிக்கும் போது அதில் வரும் சம்பவங்கள் ஒவ்வொருவருக்கும் தங்கள் வாழ்க்கையில் நடந்தவைகளைப் போலவே தோன்றும். அவ்வளவு அழகாகப் பார்வதியை அமைத்திருக்கிருர். இவ்வளவு நன்ருக இருப்பதன் பயனுகவே பார்வதி இரண்டாம் பதிப்பு இப்பொழுது வெளி வந்திருக்கிறது. இன்னும் பல பதிப்புகள் வந்தால் கூட பார்வதிக்கு ரஸிகர்களிடம் அதிக கிராக்கி இருக்கும் என்று நம்புகிறேன்.

காந்திஜியின் அருள் வாக்கு

[தொகுத்தவர்: "ஆயன்." வெளியிட்டோர்: இன்ப நிலையம், 43, பாளையப்பன் தெரு, ஏழுகிணறு, சென்னை. விலை அணு நான்கு.]

மிகவும் சிறிய அளவில் பாபுஜியின் அழகான மூவர்ண அட்டையுடன், வெண்மையான காகிதத்தில் 96 பக்கங்களில் காந்திஜியின் வாழ்க்கைச் சுருக்கமும் அவருடைய மணி மொழிகளும் இதில் தொகுக்கப்பட்டிருக்கிறது. காந்திஜி 'ஹரிஜன்' பத்திரிகையிலும், மற்றும் பிரசங்கங்கள் மூலமும், வேறு பத்திரிகைகளில் எழுதிய கட்டுரைகளின் வாயிலாகவும் வெளியிட்ட பொன் மொழிகளே இவைகள். பாபுஜியின் இந்த அமுத மொழிகள் ஒவ்வொருவர் சட்டைப் பையிலும் எப்பொழுதும் இருக்க வேண்டியது. இந்த எண்ணத்துடன் தானே என்னவோ புத்தகத்தைச் சிறு அளவில் வெளியிட்டவர்கள் அதன் விலையையும் மிகக் குறைவாக வைத்திருக்கிருர்கள். பாபுஜியின் இந்த அமுத மொழிகளை வாங்குங்கள் என்று நான் வேறு சிபார்சு செய்ய வேண்டுமா?

ராஜாஜியின் உவமைகள்

[வெளியிட்டோர்: புது முறை வெளியீடு, மாம்பலம் சென்னை. 17. விலை ரூ. 1-8-0]

ராஜாஜியின் பேச்சு வன்மையையும், அவருடைய உதாரணக் குட்டிக் கதைகளையும் கேட்காத தமிழனே இருக்க முடியாது. ராஜாஜியினுடைய ஒவ்வொரு உதாரணமும் ஒவ்வொருவர் உள்ளத்திலும் பதிவதாக இருக்கும். அப்படிப்பட்ட பல உவமைகளைத் திரட்டி வெளியிட்டிருக்கின்றனர், புது முறை வெளியிட்டினர். ராஜாஜியின் படத்துடன் இரு வர்ண அட்டை புத்தகத்தை அலங்கரிக்கிறது. ஆனால் புத்தகத்தின் விலை மாத்திரம் அதிகம் என்று தான் சொல்ல வேண்டும். நல்ல புத்தகத்தை வெளியிடும் இப்பதிப்பகத்தார் விலையிலும் கொஞ்சம் தாராள மனதைக் காட்டியிருக்கலாம்.

ரம்பா

பொங்கல் மலர்

அழகிய மூவர்ண ஆர்ட் அட்டையுடனும், பல பிரபல எழுத்தாளர்களின் கதை, கட்டுரைகள், கிராமியப் பாடல்களுடனும், நடிக நக்ஷத்திரங்களின் வாழ்க்கை வரலாறுகளுடனும் வெளிவருகின்றது.

விலை 12 அணு

தபால் மூலம் பெற விரும்புவோர் ரூ. 1-2-0 போஸ்டல் ஆர்டர் அல்லது மணியார்டர் மூலம் அனுப்பி உங்கள் காப்பிகளை ஊர்ஜிதம் செய்து கொள்ளுங்கள்.

விபரங்களுக்கு

ரம்பா காரியாலயம்

சென்னை - 4.

கடைசிச் செய்திகள்

"ரவி" காலமானார்

பிரபல தமிழ் கதாசிரியரும், ஹாஸ்ய எழுத்தாளருமான "ரவி" என்ற புனைபெயர் கொண்ட எம். ஜே. ராமலிங்கம் இம்மாதம் 8-ந் தேதி காலமான செய்தி கேட்டு வருந்துகிறோம். இரண்டு மாத காலமாகவே அவர் நோய் வாய்ப்பட்டு இருந்தார். இந்த இளம் வயதில் அவர் காலமானது தமிழ் இலக்கியத்திற்கு ஒரு பெரிய நஷ்டமாகும். அவரது குடும்பத்தாருக்கு நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஸ்ரீ. எம். ஜே. ராமலிங்கம் 1912-ம் வருஷத்தில் சென்னையில் பிறந்தார். "ரவி" என்ற புனைபெயரில் அவர் 1933-ம் வருஷம் முதற்கொண்டு சிறு கதைகளும், ஹாஸ்யக் கட்டுரைகளும் எழுதி வந்திருக்கிறார். "ஆனந்த விகடன்" பத்திரிகையில் முதன் முதலாக சிறு கதைப் போட்டி வைக்கப்பட்ட போது "ஊமச்சியின் காதல்" என்ற அவரது கதைக்கு நூறு ரூபாய் முதற் பரிசு கிடைத்தது.

அது முதல் அவர் "ஆனந்த விகடன்" பத்திரிகையில் உதவி ஆசிரியராக அமர்ந்து பல சிறு கதைகளும், ஹாஸ்யக் கட்டுரைகளும் எழுதி வந்தார். பிறகு அதை விட்டு விலகி, "ஹநுமான்" பத்திரிகையின் ஆசிரியராக சென்ற வருஷம் வரை இருந்திருக்கிறார். இடையே அவர் சிறிது காலம் "ஜெய பாரதி" பத்திரிகையில் ஆசிரியராகவும் வேலை பார்த்திருக்கிறார்

சென்ற வருஷத்தில் "ஹநுமான்" பத்திரிகையிலிருந்து விலகி "கதை மலர்" என்ற இலக்கிய மாதப் பத்திரிகையை சொந்தமாகவே நடத்தி வந்தார். படிப்பதற்கு ரஸமான கதைகளைக் கொடுத்து வந்த "கதை மலர்" அவருடைய திறமைக்கு ஒரு உதாரணமாகும்.

அவர் சிறந்த தேச பக்தரும் கூட. 1942-ம் வருஷத்திய சுதந்திர இயக்கத்திலீடுபட்டு அவர் இரண்டு வருஷம் சிறை வாசம் அனுபவித்திருக்கிறார்.

அவருக்கு தாயாரும், ஒரு சகோதரியும், இரு சகோதரர்களும் இருக்கின்றனர்.

கல்கத்தாவில் சந்திரலேகா

"சந்திரலேகா" ஹிந்திப் படம் கல்கத்தாவில் ஒரியன்ட், வீணா, பஸுஸ்ரீ ஆகிய மூன்று தியேட்டர்களில் ஏககாலத்தில் இம் மாதம் 2[illegible]-ந் தேதி வெளிவந்திருக்கிறது. இப்படத்தை ஆரம்பித்து வைத்த மேல் வங்காள கவர்னர் டாக்டர் கைலாஸநாத் கட்ஜு, "சந்திரலேகா இது வரை இந்தியாவில் தயாரான எல்லாப் படங்களிலும் சிறந்தது" என்று கூறி, அதன் தயாரிப்பாளர் ஸ்ரீ எஸ். எஸ். வாஸனைப் பாராட்டிப் பேசினார். இக் காட்சிக்கு ஐ. மா. கவர்னரான ஸ்ரீமதி சரோஜினி நாயுடுவின் புத்திரியான ஸ்ரீமதி பத்மஜா நாயுடுவும் விஜயம் செய்திருந்தார்.

அன்றைய தினம் வசூலான ரூ. 5051-ஐ (தியேட்டர் நிர்வாகிகளும், ஜெமினி பிரதிநிதி ஸ்ரீ. வி. கே. என். சாரியும் சேர்ந்து) தர்ம கைங்கரியங்களுக்கு பயன் படுத்தும்படி டாக்டர் கட்ஜுவிடம் அளித்தனர்.

சரஸ்வதிகான நிலையம்

ஜெய்ப்பூரில் நடை பெற்ற இந்திய தேசியக் காங்கிரஸுக்கு விஜயம் செய்தவர்களைத் தமது கலைத் திறனால் மகிழ்விக்க சரஸ்வதிகான நிலையத்தார் அங்கு போயிருந்தார்கள். இந்த நிலையத்தின் மாணவிகள் பேராசிரியர் சாம்ப மூர்த்தியின் தலைமையில் அங்கு நடன விருந்தளித்தார்கள்.

ராஜ குமாரியின் தம்பிக்கு ஆபத்து

பிரபல நடிகை டி. ஆர். ராஜ குமாரியின் தம்பியான டி. ஆர். சக்ர வர்த்தி இம்மாதம் 11-ந் தேதி, அவர் ஏறிச் சென்ற மோட்டார் ஸைக்கிளும் ஒரு லாரியும் மௌண்ட் ரோடில் மோதியதால் விபத்திற்குள்ளாகி, சென்னை ராயப்பேட்டை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். அவர் இப்பொழுது குணமடைந்து வருகிறார்.

சினிமாவில் நவகாளி யாத்திரை

கிழக்கு வங்காளத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்காக காந்திஜி ஒவ்வொரு கிராமத்திற்கும் கால் நடையாகச் சென்று பிரசாரம் செய்தாரல்லவா? அந்த சரித்திரப் பிரசித்தி பெற்ற யாத்திரையை கல்கத்தாவைச் சேர்ந்த "ஆனந்தபஸார் பத்திரிகை", "இந்துஸ்தான் ஸ்டாண்டர்டு" ஆகிய பத்திரிகைகளின் போட்டோகிராப்பர்கள் ஒரு துண்டுப் படமாகத் தயாரித்திருக்கிறார்கள். ஹிந்துஸ்தானி வியாக்கியானத்துடன் உள்ள இப்படம் ஜெய்ப்பூர் காங்கிரஸில் கடைசி நாளன்று காட்டப்பட்டது.

ஸ்ரீ தேவி நாடக சபா

தஞ்சைக்கு விஜயம் செய்துள்ள இந்த சபையினர் "மந்திரி குமாரி" நாடகத்தை இம்மாதம் 14-ந் தேதி முதல் ஆரம்பித்திருக்கின்றனர். ஸ்ரீ. பரிசுத்த நாடார் தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது. அவர் இந்த நாடகத்தையும், அதை நடித்து வரும் சபைத் தலைவர் ஸ்ரீ. கே. என் ரத்தினத்தையும் பாராட்டிப் பேசினர்.

ஏ. ஆர். கே. நாடக சபா

தற்போது காஞ்சிபுரத்தில் நாடகம் ஆடிவரும் ஏ. ஆர். கே. நாடக சபையார் சீக்கிரமே கடலூர் என். டி. யில் ஒரு த ் நாவிகத் தியேட்டரை அமைத்துக் கொண்டு நாடகங்களை நடத்தப் போவதாகத் தெரிகிறது.

புவன நடனேஸ்வரி பிலிம்ஸ்

சென்னையில் புதியதாய்த் தோன்றியிருக்கும் புவன நடனேஸ்வரி பிலிம் ஸார் ஸதர்ன் ஸ்டுடியோவில் சர்குணவதி, பேசாமடந்தை ஆகிய தமிழ்ப் படங்களைத் தயாரிக்கப் போகிறார்களாம்.

செய்திப் படங்கள்

இம்மாதம் 17-ந் தேதி, தென்னிந்தியப் பத்திரிகைக்காரர்கள் சங்கத்தின் அங்கத்தினர்களுக்குநான்கு செய்திப் படங்களை, பிரிட்டிஷ் செய்தி ஸ்தாபனத்தார் திரையிட்டுக் காண்பித்தார்கள்.

"ஸ்வர்ண மாலா"

ஸ்வர்ணாம்பிகை பிலிம்ஸார் "ஸ்வர்ண மாலா" என்ற தமிழ்ப் படத்தை சேலம் ரத்னா ஸ்டுடியோவில் தயாரித்து வருகின்றனர். தமிழ் நாட்டுக் காதல் கதையான இந்தப் படத்தில் எம். ஜி. ராமச்சந்திரன், வி. என். ஜானகி, டி. எஸ். பாலையா, எம். ஆர். சந்தான லக்ஷ்மி, எம். என். நம்பியார் முதலியோர் நடிக்கின்றனர்.

அகில இந்திய சுதேசி பொருட் காக்ஷி

வருஷா வருஷம் நடைபெறுவது போல் இவ்வருஷமும் இம்மாத முடிவிலிருந்து மேற்படி பொருட்காக்ஷி நடைபெறுகிறது. பல விசேஷ அம்சங்களுடன் முக்கியமான செய்திப் படங்களையும், மக்களுக்குக் காட்ட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். குறைந்த கட்டண விகிதத்தில் சிறந்த படங்களைக் காட்டும் பொறுப்பை டைரெக்டர் கே. சுப்ரமண்யம் ஏற்றுக்கொண்டிருக்கிறார். தவிர, நேதாஜி நாடக சபாவின் நாடகங்களும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

பிலிம் மகாநாடு

சினிமாத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் மகாநாடு ஒன்று சென்னையில் அடுத்த வருஷம் ஏப்ரல் மாதம் நடைபெறுமென்று தெரிகிறது. இதற்கான ஏற்பாடுகளை தென்னிந்திய பிலிம் சேம்பர் செய்து வருவதாகவும் தெரிகிறது.

வேண்டாத மனைவி

[57-ம் பக்கத் தொடர்ச்சி]

"நான் இப்படிப் பேசுகிறேனே என்று பார்க்காதீர்கள். உங்களைப் போலுள்ள பெண்களுடைய விவாகப் பிரச்னையை தீர்க்க முடியாததினால் தானே உங்களுடைய வாழ்க்கையை நீங்களே தாங்கிக் கொள்ள வேறு ஏற்பாடுகளைச் செய்யவேண்டி வருகிறது. அந்த மாதிரி யெல்லாம் இல்லாமற் போனால் இன்று நீங்கள் இந்த ஆபீஸில் ஒரு வேலை செய்ய வந்திருப்பீர்களா? எங்கோ ஒருவரை மணந்து கொண்டு, குழந்தை குட்டிகளைப் பார்த்துக் கொள்ளும் வேலையில்லவா இருப்பீர்கள்?" என்றான். நல்ல காலமாக அப்பொழுது காரியாலயத்தில் எல்லோருமே வந்துவிட்டிருக்கவில்லை. அதுவுமல்லாமல் அவர்களுடைய இடமும் ஓர் மூலையில் இருந்தது.

வத்ஸலா தலைகுனிந்த வண்ணம் நாகராஜனுடைய குட்டிப் பிரசங்கத்தை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்து விட்டு, "எல்லோரும் வாய் நிறையப் பேசுகிறார்களே யொழிய அதை நடை- முறையில் செய்ய எவருமே முன் வருவதில்லை" என்று ஒரு குறும்புச் சிரிப்புடன் சொன்னாள் வத்ஸலா.

"என்னைப் பொருத்த வரையில் எனக்கு நியாயம் என்றுபட்டதை எடுத்துச் சொல்லவும், அதன்படி நடக்கவும் எனக்குப் போதிய துணிவு உண்டு, மிஸ் வத்ஸலா" என்றான் நாகராஜன் மிகக் குஷியுடன்.

"எல்லாம் போகப் போகத் தெரிகிறது" என்று சொல்லிக் கொண்டே வெளியே சென்றாள் வத்ஸலா.

தன் திட்டம் முக்கால்வாசி பலித்துவிட்டது என்ற நம்பிக்கையை உண்டாக்கியது. அன்று அவன் வத்ஸலாவுடன் நடத்திய சம்பாஷணை. எப்படியாவது அன்றிரவு வத்ஸலாவைப் பற்றி அப்பா, அம்மாவிடம் பேசுவது எனத் தீர்மானித்தான் நாகராஜன்.

ஆனால் அவனுக்கு முன் அவரே அந்தப் பேச்சை ஆரம்பித்துவிட்டார்: "நாகராஜா, அடுத்த வாரம் உன்னுடைய மாமா உன் கலியாணத்திற்கு முகூர்த்தம் வைத்து கடிதம் எழுதியிருக்கிறான். உனக்கு வேண்டியவற்றை வாங்கிக் கொடுக்க நாளை காலை இங்கு வருகிறான்" என்றார்.

நாகராஜன் திடுக்கிட்டுப் போனான். "கலியாணமா, அவ்வளவு சீக்கிரத்திலா?" என்று குளறினான் அவன்.

"ஆமாம். காலா காலத்தில் நாங்கள் செய்ய வேண்டியதைச் செய்து முடிக்க வேண்டாமா?"

நாகராஜனுக்கு வயிற்றெரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. "இந்தக் கலியாணம் எனக்கு வேண்டாமப்பா. அதிலும் மாமா பெண் விமலாவை விவாகம் செய்து கொள்ள எனக்குக் கொஞ்சம்கூட இஷ்டமில்லை" என்று தலை குனிந்தபடியே படபடப்புடன் சொன்னான்.

"அப்படியானால் கலியாணமேயில்லாமல் இருந்துவிடப் போகிறாயோ? நீ வேறு ஏதாவது பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ள விரும்பினால் அதையாவது வாய் விட்டுச் சொல்" என்றார்.

அதற்கு மேலும் சங்கோஜப் பட்டால் காரியம் மிஞ்சிப் போய்விடும் என்று தோன்றியது நாகராஜனுக்கு. அப்பாவின் கோபமோ நிமிஷத்திற்கு நிமிஷம் அதிகரித்துக் கொண்டு சென்றது. "நாளைக் காலைக்குள் உன்

டிவு எனக்குத் தெரியவேண்டும்'' ன்று சொல்லி எழுந்து போய் விட் .ார் தகப்பனர்.

அவனுடைய அம்மாவோ எதைப் பற்றியும் கவலைப் பட்டுக் கொண்ட தாகவே காட்டவில்லை. எப்படியோ ன்று விழுங்கிக் கொண்டே வத்ஸ வைப் பற்றி அம்மாவிடம் பிரஸ்தா ான் நாகராஜன். ஆனல் அம்மா தாரு பதிலுமே கூறவில்லை.

மறுநாள் காலை அவனுடைய மாமா வும் ஊரிலிருந்து வந்து சேர்ந்தார். நாகராஜனுக்கு அவர் முகத்தில் விழிக் கவே பரம துவேஷமாக இருந்தது. ஏதோ மரியாதைக்கு இரண்டொரு வார்த்தைகளும் மாமாவோடு பேச வேண்டியிருந்தது அவனுக்கு.

"அம்மா எல்லாவற்றையும் சொல்லியிருப்பாளே, நாகராஜா. நீ ஒரு ஜாப்தா போட்டுக் கொடுத்து விடு" என்ருர் மாமா.

அப்படியே மாமாவின் மென்னி யைத் திருகிப் போட்டு விடலாமா என்றிருந்தது அவனுக்கு. அவருக்கு ஒரு பதிலும் சொல்லாமல் வெளியே சென்று விட்டான். அன்று எப்படி யாவது வத்ஸலாவிடம் வெளிப்படை யாகச் சொல்லி, அவளுடைய பெற் ருேரைக் கொண்டே விவாகத்தை நிறைவேற்றிக் கொள்வது என்றும் தீர்மானித்தான்.

அன்று ஏனே வழக்கத்திற்கு மாருக வத்ஸலா சீக்கிரமே வந்து விட்டது நாகராஜனுடைய எண்ணத்தைப் புரிந்து கொண்டதே போலிருந்தது. "வத்ஸலா, உன்னிடம் ஒரு முக்கிய மான விஷயம் பேச வேண்டும். கொஞ்ச நேரம் நாம் ஸ்டுடியோவின் நந்தவனத்தில் உலாவிக் கொண்டி ருந்து விட்டு வரலாமா?'' என்று கேட்டான் நாகராஜன்.

வத்ஸலா சற்றே யோசித்து விட்டு அவனைப் பின் தொடர்ந்தாள். இளம் தளிர் நிறைந்த வேப்பமரமொன்றி னடியிலிருந்த பசும் புற்றரையில் இரு வரும் அமர்ந்தனர்.

"விஷயம் ஒன்றும் பிரமாதமில்லை. வீட்டில் என் விவாகத்திற்கான பேச்சு நடந்து கொண்டிருக்கிறது. அவர்கள் நிச்சயித்திருக்கும் பெண் ணைக் கலியாணம் செய்து கொள்ள எனக்கு இஷ்டமில்லை. உன்னைப் பற்றியும் வீட்டில் சொன்னேன். அவர்கள் பணம், அந்தஸ்து என்றெல் லாம் சொல்கிருர்கள். ஆனல் நான் உன்னைத்தான் மணப்பது என்று தீர்மானித்து விட்டேன். இனிமேல் உன் முயற்சிதான் ஏதாவது பல னளிக்க வேண்டும். நீ உன் அப்பா, அம்மாவிடம் சொல்லி ஏதாவது செய்ய முடியுமா பாரேன்'' என்று மடமடவென்று பேசித் தீர்த்தான் நாகராஜன். அவனுடைய பரந்த நெற்றி சிவந்துபோய் முத்து முத்தாக வியர்வைத் துளிகள் அரும்பியிருந் தன. அவனுடைய உள்ளக் கிளர்ச்சி அவனுடைய உதடுகளின் துடிப்பி லிருந்து நன்கு வெளியாகிக் கொண் டிருந்தது.

சற்றுத் தொலைவிலிருந்த நடை பாதையில் இதர சிப்பந்திகள் வருவ தும் போவதுமாக இருப்பதையே உற்று நோக்கிக் கொண்டிருந்தாள் வத்ஸலா. அவ்வப்பொழுது மாறி மாறி தோற்றமளித்துக் கொண்டி ருந்த வத்ஸலாவின் முகபாவம் நாக ராஜனுடைய ஹிருதயத் துடிப்பை மேலும் வேகமாக்கிக் கொண்டிருந் தது.

"ஏன், வத்ஸலா! என்னை மணந்து கொள்ள உனக்கு விருப்பமில்லையா?'' என்று கேட்டான் நாகராஜன் மறு படியும்.

"அப்படியில்லாவிடில் ஏன் நீங்கள் என்னை அழைத்தபோது உங்கள் பின்னல் வந்திருக்கப் போகிறேன்? ஆனல்...'' என்று சொல்லி நிறுத்தி ஞள் வத்ஸலா.

"ஆனல், என்ன வத்ஸலா?'' என்று அழமாட்டாக் குறையாகக் கேட்டான் நாகராஜன்.

"ஆனால் எனக்காக நீங்கள் ... ளுடைய பெற்றோரை விரோ... கொள்ள நேரிடுமே என்றுதான் பயப் படுகிறேன். சந்தோஷகரமாக ஆரம் பிக்க வேண்டிய நம்முடைய மண வாழ்க்கை பலருடைய அதிருப்தி யுடன் தொடங்குவதை நான் விரும்ப வில்லை" என்றாள் வத்ஸலா.

"அதற்காக நீ கவலைப்படாதே வத்ஸலா. நம்மிருவருடைய சம்பாத் தியம் நம் புதுக் குடும்பத்தை தாங்கப் போதுமானது. அப்பாவின் கையை நான் எதிர்பார்க்க வேண்டியதில்லை" என்று ஆவேசத்துடன் பேசினான் நாகராஜன்.

வத்ஸலா தலை குனிந்தபடி உட்கார்ந் திருந்தாள். "நீ 'உம்' என்று சொன் னால் போதும். நான் மேற்கொண்டு ஏற்பாடு செய்வேன்" என்று இறைஞ் சினான் நாகராஜன்.

"எனக்குக் கொஞ்சம் அவகாசம் கொடுங்கள். நாளைக் காலை உங்க ளுக்கு என் முடிவை தெரிவித்து விடு கிறேன்" என்றாள்.

நாகராஜனுக்கும் அவளுடைய கோரிக்கை நியாயம்தான் என்று தோன்றியது. இதற்குள் காரியாலய வேலை நேரம் ஆரம்பமாகிவிட்டபடி யால் இருவரும் எழுந்து சென்றனர். அன்று மாலை அவன் வீட்டிற்கு வந்த போது தன் மாமா ஊருக்குச் சென்று விட்டதை அறிந்து ஒரு பெரு மூச்சு விட்டான் நாகராஜன்.

மறுநாள் ஆபீஸில் வத்ஸலாவின் வருகைக்காக எதிர்பார்த்துக்கொண் டிருந்தான் நாகராஜன். ஆனால் வத்ஸ லாவுக்குப் பதிலாக அவளிடமிருந்து வந்திருந்த ஒரு கடிதம் அவனை அப் படியே திகைக்க வைத்து விட்டது. தன்னால் பெரிய குடும்பத்துப் பிள்ளை யின் வாழ்வு கெட்டுப் போக விரும்ப வில்லை என்றும், ஆகையால் தானும் தன் வேலையை ராஜினாமா செய்து விட்டதாகவும் எழுதியிருந்தாள் வத்ஸலா.

...னுக்குப் ... விடும் போ... கொண்டு ஆபீஸில் ... இயலாமல் வீட்டிற்... ...து ... தான். விமலாவையும், வத்ஸலாவை யும் ஏக காலத்தில் தன் மடமையினா... இழந்து விட்டதாகவே தோன்றி... அவனுக்கு.

ஆனால் நாகராஜனின்றியே வி... வின் விவாகம் நிறைவேறும் ... நெருங்கிக் கொண்டு வந்தது. எப்ப டியோ பிள்ளையை வலுக்கட்டாயப் படுத்தி தன் தம்பியின் வீட்டுக்கு அழைத்துச் சென்றாள் அவனுடைய தாயார்.

மாமாவின் ஊரில் எல்லோரும் தன்னை 'மாப்பிள்ளை! மாப்பிள்ளை!' என்று கூப்பிட்டு அவசர உபசாரம் செய்வதைப் பார்த்த போது நாகராஜ னுக்கு ஒன்றுமே புரியவில்லை. போதாக் குறைக்கு அங்கே குறுக் கும் நெடுக்குமாக வத்ஸலா நடமாடு வதைக் கண்ட போது நாகராஜனு டைய தவிப்பு இன்னும் அதிகமாகி விட்டது.

அங்கே கிடந்த கலியாணப் பத்தி ரிகை பொன்றில் தனக்கும் விமலா வுக்குமே கலியாணம் என்று அச் சாகி யிருப்பதைப் பார்த்த பின்னர் தான் அவனுக்கு இதெல்லாம் தன் பெற்றோரின் சூழ்ச்சி என்பது வெளி யாயிற்று. "வத்ஸலாவின் எதிரில் விமலாவை மணப்பதா? இப்படியே எங்காவது ஓடிப் போனால் கூட தேவலை" என்று தோன்றியது அவ னுக்கு.

அதிலும் அந்த வத்ஸலா மிகவும் சகஜமாகத் தன் தாயாருடன் பேசிச் சிரித்துக் கும்மாள மடிப்பதைப் பார்த்த போது அவனுக்கு 'இந்த பெண்ணுக்குத் தான் என்ன கல் நெஞ்சு? ஒன்றுமறியாதவளைப்போல ஓடியாடுகிறாளே. மாமாவின் வீட் டிற்கு இவள் ஏதாவது உறவினளாக இருக்குமோ' என்று தோன்றி யது. வேறு வழியின்றி தன் விவா

யதா...
ந்த அனைவரு—
ியாகப் பார்த்து
பது போலவும்
.

டொரு நிமிஷங்க
க்க நேர்ந்த வத்
! விமலா வத்
கு ... த்திலும் குறைந்
ில்லை'' ... சொல்லி சிரித்
கொண்டே ஓ... போனாள்.

கராஜனுக்கு ஒரு பெரு மூச்சு
வதைத் தவிர வேறொன்றும்
ய முடியவில்லை.

று நாட் காலை முகூர்த்தத்தின்
து மணப்பெண்ணாக வத்ஸ
வ வந்தமர்ந்த போது நாகராஜன்
டியே பிரமித்துப் போனான்.

த்ஸலா நீ தான் விமலாவா!''
று உற்சாகம் தாங்க முடியாமல்
... விட்டு உரத்துக் கூறி விட்டான்
...ன்.

...ப் பந்தலிலிருந்த அவ்வளவு
பேரும் இந்தக் காட்சியை எதிர்பார்த்திருந்தவர்களேபோல 'ஹோ' வென்று இரைச்சலிட்டு கொம்மாளமடிக்கத் தொடங்கினர்.

மேளக்காரனுடைய வாத்தியக் கைவரிசையிலும், புரோகிதருடைய மந்திர உச்சாடனங்களுக்கு மிடையே "நீங்கள் தான் ஒரு சினிமாக் காதலி வேண்டுமென்றீர்களாம். அதற்காக என்னை வத்ஸலாவாக்கி அனுப்பினார் உங்களுடைய அப்பா. பாமினி ஸ்டுடியோவின் முதலாளி ஸ்ரீ. தாஸனும் உங்கள் அப்பாவும் சேர்ந்து தான் இந்த ஏற்பாடு செய்தார்கள். செல்லப் பிள்ளை நீங்கள் அவருக்கு" என்று விமலாவாக அமர்ந்திருந்த வத்ஸலா மொழிந்த போது நாகராஜனுடைய முகத்தில் அப்படியே அசடு வழிந்தது.

அரிய ஈஸ்ட்டன் மருந்துகள்

மானிட திரேகத்தில் ஏற்படும் வியாதிகளை மிகச் சுலபமான முறையில் சுகப்படுத்தும் அரிய மருந்துகள், பல லக்ஷக்கணக்கான ஜனங்களுடைய சுகவாழ்வுக்கு உதவி அளிக்கப் பட்டவை. இந்த மருந்துகளுக்கு பத்தியம் கிடையாது.

1. **வாறாட்டு மாத்திரைகள்:** இது இனிப்பு நீரிழிவையும், மேக ...யாதிகளையும் மிக சுலபமாக சுகப்படுத்துகின்றது.

2. **யாலிபிட் மாத்திரைகள்:** இது மூல வியாதிகளையும், உஷ்ண ...ய்வுக்களால் உண்டாகும் உபத்திரவங்களையும் சுகப்படுத்துகிறது.

3. **தாக்கம் மாத்திரைகள்** இது உஷ்ணச் சூடு, வெள்ளை, வட்டை முதலான வியாதிகளை மிக சுலபமாக சுகப்படுத்துகின்றது.

4. **லார்பிட்டிக்கு மாத்திரைகள்:** இது திரேகத்திலுள்ளதான ...டிகளுடைய சோர்வை நீக்கி திரேக பலத்தை தருகின்றது. மற்றெல்லா விதமான வியாதிகளுக்கும் மருந்துகள் உண்டு. தாங்கள் எழுதவும். இந்த மாத்திரைகள் 25 நாட்கள் சாப்பிடக்கூடிய 100 மாத்திரைகளுக்கு ரூ. 12. மேலும் தங்களுடைய ஜாதக பலனை மிகமிக சரியாக கவனித்து பலன்களை சரியாக எழுதி அனுப்புவதுடன் தாங்கள் கேட்கும் 5-கேள்விகளுக்கும் சரியான பதில் எழுதி அனுப்புகிறோம். ரூ. 5|—உடன் தங்களுடைய ஜாதக நகலை அனுப்பவும். விலாஸம்:—

Prof. S. K. PATTATH, B. B. Dispensary. P. O. Batang Berjuntai
(Selangor) MALAYA.